மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ்.இளங்கோ

கேரளத்தில் விவாகரத்து!



மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 | 28-2-60 | ஒலி 17

கேரளத்தில் மந்திரிசபை நிலைக்குமா?

சென்ற இருபது நாட்களாக நடைபெற்று வந்த பயங்கரமான மல்யுத்தத்திற்குப்பின்பு கேரளத்தில்கூட்டு மந்திரி சபை அமைக்கப்பட்டிருக்கிறது.

பி. சோ. கட்சியினரும், காங்கிரஸ் கட்சியினரும் ஒன்றுகச் சேர்ந்து இந்த மந்திரி சபையை அமைத்திருக்கின்றனர்!

பி. சோ. கட்சித் தலைவர் பட்டம் தாணுபிள்ளை தலைமையில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த மந்திரி சபை யாவது நிலைத்து வாழுமா, நீடித்து நிற்குமா என்ற வினு எல்லோருடைய உள்ளத்திலும் எழத் தான் செய்யும்!

பயங்கரம் நிறைந்த கேரளத்தின் சோக வரலாற்றுச் சுவடியைப் புரட்டிப் பார்த்தால் எல்லோருடைய மனதிலும் சஞ்சலம் ஏற்படத் தான் செய்யும்! இநத மந்திரி சபைக்கு நீண்ட ஆயுள் இருக்குமென்று உறுதியளிக்க எவருக்குமே தைரியம் ஏற்படாது!

கேரளத்தில் எந்தக் கட்சியினருக்கும் கணிசமான ஆதரவு கிடையாது! கேரளத்தின் முதல் தேர்தலிலும் எந்தக் கட்சிக்கும் கணிசமான வெற்றி கிடைக்கவில்லை! அதனுல் முதல் மந்திரி சபையே உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்தது!

அதற்கு அடுத்த படியாக கம்யூனிஸ்டு கட்சி கேரளத்தின் நிர்வாகத்தை ஏற்றது! கம்யூனிஸ்டு கட்சி போதிய பலத்தோடும், மக்களின் நல்ல செல்வாக்கோடும் தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது! ஆனுல் பதவியிலேயே இருந்து பலன் கண்ட பிற்போக்கு வாதிகளுககு இது பொறுக்கவில்லை! புரட்சி என்ற பெயரால், பொது ஜன கிளர்ச்சி என்ற பெயரால் பெரும் கலகத்தை உண்டாக்கினர்! சமயத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்த மத்திய சர்க்கார் தலையிட்டு கம்யூனிஸ்டு மந்திரி சபையை கலைத்து விட்டு ஜனுதிபதியின் ஆட்சியை ஏற்படுத்தியது!

கம்யூனிஸ்டு கட்சியை ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற ஒரேநோக்கத்தோடு பி. சோ. கட்சியும் முஸ்லீம்லீக் கட்சியும் காங்கிரஸ் கட்சியும் ஒன்றுசேர்ந்து ஒருகூட்டணி அமைத்து தேர்தலில் நின்று வெற்றியும் பெற்றனர்! இந்தத் தேர்தலில் கூட எந்த ஒருகட்சிக்கும் பெரும்பான்மையான இடம் கிடைக்கவில்லை!

இந்தத் தேர்தலுக்குப் பின்பாவது கேரளத்தில் நல்ல நிலை ஏற்பட்டிருக்கிறதா என்றுல அதுவுமில்லை! கூட்டு கட்சி வெற்றி பெற்ற பினபு பயஙகரமான பதவிச் சண்டை ஏற்பட்டது!

கம்யூனிஸ்ட்டு கட்சியை ஒழிக்க கூட்டுச் சேர்ந்த இந்த மூன்று கட்சிகளுமே மூன்று திக்கை நோக்கி நடக்க ஆரம்பித்தன!

தேர்தல் காலத்தில் கூட்டுச் சேர்ந்த மூன்று கட்சிகளும் ஒன்று சேர்ந்து மந்திரி சபையை அமைக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கை எழுந்தது! பி. சோ. கட்சியே இந்தக் கோரிக்கையை விடுத்தது! காங்கிரஸ் கட்சி இதற்கு சம்மதிக்கவில்லை!

"முஸ்லீம் லீக் ஒரு வகுப்புவாதக் கட்சி, அந்த வகுப்பு வாதக் கட்சியோடு சேர்ந்து எப்படி வாழ முடியும்" என்று காங்கிரஸ் தியாகிகள் வாதம் புரியத் தொடங்கினர்!

முஸ்லீம் லீக் நேற்று முளைத்த கட்சியல்ல! நீண்ட காலமாகவே இந்த நாட்டில் இருந்து வருகிறது! இந்த முஸ்லீம் லீக் கட்சி தேர்தலுக்கு முன்பு கூட இருந்திருக்கிறது! அப்போதெல்லாம் அது வகுப்புவாதக கட்சியாகத் தெரியவில்லை போலும்!

முஸ்லீம் லீக் கோடு கூட்டு சேரலாம், முஸ்லீம் லீக் அபேட்சகர்களை ஆதரித்துப் பேசலாம், முஸ்லீம் லீக் கட்சி வெற்றி பெற உழைக்கலாம்—ஆனுல் முஸ்லீம் லீக் கட்சிக்கு ஆட்சி பீடத்தில் மட்டும் இடம கிடையாது! இது என்ன நியாயம்! இந்த நியாயத்தை தேர்தலுக்கு முன்பல்லவா பேசி இருக்க வேண்டும்!

"நீங்கள் அத்தனை பேரும் வகுப்புவாதிகள். உங்களோடு கூட்டுச் சேர மாட்டோம்" என்று முஸ்லீம் லீக் கட்சியை ஒதுக்கி இருந்தால் இவர்களை யோக்கியர்கள் என்று சொல்லலாம்!

முஸ்லீம் லீக்கின் ஆதரவைப் பெற்று வெற்றி பெற்றவுடன் அவர்களை வகுப்புவாதிகள், என்று தூற்றுவது நேர்மையல்ல, நீதியல்ல! நியாயமும் அல்ல! ஏறி வந்த ஏணியை எட்டி உதைப்பதற்குச் சமமாகும்!

முஸ்லிம் லீக் வகுப்புவாதக் கட்சியோ என்னவோ அது நமக்குத் தெரியாது! ஆனுல் முஸ்லீம் லீக் வகுப்பு வாதக் கட்சியாக இருந்தாலும் காங்கிரஸ் அதை புறக்கணிப்பது நியாயமாகாது! வகுப்புவாதக் கட்சி என்றுல் அந்தக் கட்சியோடு கூட்டு சேராமலேயே இருந்திருக்கலாம்! கூட்டு சேர்ந்த பின்பு அந்தக் கட்சியை எட்டி உதைப்பது நேர்மையை, பண்பை காட்டுவதாகாது!

காங்கிரஸ்காரர்கள் உண்மையான ஜனநாயகவாதிகள் என்றுல் இவைகளைப்பற்றி யெல்லாம் சிந்தித்துப் பார்ப்பார்கள்! எது நேர்மை, எது நியாயம் என்பதைப் பற்றி யோசித்துப் பார்ப்பார்கள்!

காந்தி சீடர்களுக்கும், ஜனநாயகத்திற்கும் தான் நீண்ட கால பகையாயிற்றே! அவர்கள் இவைகளைப் பற்றியேன் கவலைப்படப் போகிறுர்கள்!

கேரளத்தில் கூட்டுச் சேர்ந்த கட்சிகளிடையே ஏற்பட்ட சிண்டுபிடிச் சண்டை ஓரளவு சமாதானமாகி இருக்கிறது! இந்த சமாதானம் நீண்ட காலம் நிலைக்கும் என்று எவரும் ஆருடம் கணிக்க முடியாது!

முஸ்லீம் லீக் எதற்காக விட்டுக் கொடுத்தது, ஏன் விட்டுக் கொடுத்தது என்பதெல்லாம் போகப் போகத் தான் தெரியும்!

முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கும், பட்டம் ஓர் பிடிவாதக்காரர், எதையும் சாதிக்கும் வல்லமை யுடையவர் என்பதை அனைவரும் அறிவார்கள்! இந்த நிலையில கேரளத்து மந்திரி சபை பட்டம் தாணு பிள்ளையின் மனம் கோணுமல் நடந்துகொள்ள வேண்டும்! பட்டம் இட்ட கட்டளைக்கு, பட்டம் போடும் சட்டத்திற்கு மந்திரி சபை கட்டுப்பட்டுத் தான் கிடக்கவேண்டும்.

காங்கிரஸ்காரர்கள் கொள்கை பேசுவார்களானுல் தங்கள் கோட்பாடுகளை கூறுவார்களானுல் விளைவு பயங்கரமாகவே முடியும்.

இவைகளையெல்லாம் கொண்டு ஆராய்ந்து பார்த்தால் இன்று பதவி ஏற்றுள்ள மந்திரி சபை எத்தனை காலத்திற்கு நிலைக்கும் என்று திடமாகச் சொல்லுவதற்கில்லை.

இப்போதுள்ள மந்திரி சபை கவிழ்ந்து மீண்டும் ஒரு தேர்தல் வந்தால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

தி.மு.கவுக்கு இருக்கும் ஒரே ஒரு செல்வம் தோழமை உணர்ச்சி ஒன்று தான்!

பொறாமை, பொச்செரிப்பு, வெறுப்பு இவைகளுக்கு அப்பாற்பட்டது தோழமை!

வாய் குளிர பேசுவதல்ல-தோழமை! மனங் குளிர நடப்பதே தோழமையின் இலக்கணம்!

அறிஞர் அண்ணா விளக்கம்!

சென்னை, விருகம்பாக்கம் தோழமைக் கழக கட்டிடத் திறப்பு விழா கடந்த 19—2—60 அன்று தோழர் கோதண்டபாணி தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள், வி. பி. அகிலன், ஜகதீசன், சுந்தரம், ஈரோட் நவாப் ஜான் ஆகியோர் திராவிட முன்னேற்ற கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர் அடுத்து புரட்சி நடிகர் எம். ஜி ராமச்சந்திரன் பேசுகையில் தோழமை குறித்து பல விளக்கங்கள் அளித்து சொற்பொழிவாற்றினர்!

இறுதியில் அறிஞர் அண்ணா அவர்களுக்கும், புரட்சி நடிகர் எம் ஜி, ராமச்சந்திரன் அவர்களுக்கும் பல நிறுவனங்கள், கிளைக் கழகங்கள் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டது.

அறிஞர் அண்ணா அவர்கள் பேசியதாவது :—

அன்புள்ள தலைவரவர்களே, அருமை தோழர்களே!

இந்த வட்டாரத்திலே உள்ள நமது நண்பர்கள், திராவிட முன்னேற்றக் கழக கொள்கையிலே பற்று கொண்ட தோழர்கள், பல ஆண்டுகளாகவே நல்ல பணியினை ஆற்றுகின்ற தோழர்கள் தோழமைக் கழகம் என்னும் அமைப்பினை உண்டாக்கியிருக்கிறார்கள்!

தோழமைக் கழகத்தை அமைத்த நண்பர்கள், கழகத்திற்கென்று சிறிய கட்டடம் ஒன்றை நல்ல முறையில் கட்டி முடித்து, நான் திறந்து வைக்கின்ற நல்ல நிகழ்ச்சியாகவும் உண்டாக்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றி செலுத்தவும், அவர்களது முயற்சியையும், பணியையும் பாராட்டவும் நான் மெத்தவும் கடமைப்பட்டிருக்கிறேன்!

எனக்கு முன்னாலே பேசிய நண்பர் ராமச்சந்திரன், இன்றைய தினம் நான் அதிக நேரம் பேசவேண்டுமென்றும், அதைக் கேட்டு இன்புறுவதற்காக பேச்சை சுருக்கமாக முடித்துக் கொள்வதாகவும் கூறினர். நண்பர் ராமச்சந்திரனும் நானும் கலந்து பேசுவது இது முதல் தடவை அல்ல, பல கூட்டங்களில் அவரது பேச்சை கேட்டிருக்கிறேன். இன்று அவர் தோழமை என்பதற்கு கொடுத்த அழகிய விளக்கம், பேசிய பேச்சு நல்லதொரு விளக்கமாகும்!

அவர் பேச்சைக் கேட்டு இன்புற்றிருக்கும் நேரத்தில் எம் ஜி. ஆர். அவர்கள், என் பேச்சைக் கேட்க வேண்டும் என்று கூறினார்! நல்லபடியாக இன்பத்தை அனுபவித்தபடி இருக்கிற போது, அனுபவிக்கின்ற இன்பத்தை தடை படுத்துவது தோழமைக்கு இலக்கணமாகாது

தோழமையை ஏழை பணக்காரன் என்னும் பேதத்தில் பெற முடியாது! வெறி உணர்ச்சியினாலும், ஜாதி பேதத்தாலும் தோழமையை நிச்சயம் பெற முடியாது.

தோழமைக் கழகத்திலே உள்ள நண்பர்கள், ஜாதிபேதம் நீங்கவும், மொழி உணர்ச்சி உண்டாகவும், ஏழை—பணக்காரன், ஆண்டான் அடிமை என்ற வேற்றுமை நீங்கவும் பாடுபட வேண்டும் என்றும் நண்பர் ராமச்சந்திரன் பேசினார்!

தோழமை இந்த நாட்டிற்கு மட்டுமல்ல, உலக முழுமைக்கும் சொந்தமான ஒன்று! நாம்கூட அனைவரையும் தோழர்களே என்றுதான் அழைக்கிறோம்!

ரஷ்யாவிலே இருந்து குருச்சேவ் இங்கு வரும்போது இங்கே இருப்பவர்கள் தோழமை உணர்ச்சியோடு வரவேற்கிறார்கள்! அமெரிக்காவிலே இருந்து ஐஸனோவர் வந்தாலும் தோழமையோடு வரவேற்கிறார்கள்! உலக சமாதானம் ஓங்குக என்று வாழ்த்தொலி முழக்குகின்றார்கள்!

இங்கே இருப்பவன், ரஷ்யாகாரனைப் பார்த்து, ரஷ்ய நாட்டு தோழனே என்கிறான். அங்கே இருப்பவன், இந்திய நாட்டு தோழனே என்று கூறுகிறான்! இரு சாராரும் வாய் குளிர தோழமை குறித்துப் பேசுகிறார்களே! தவிர, மனம் குளிர நடப்பதில்லை, நடக்க முடிவதில்லை!

உதாரணத்திற்கு ஒன்று சொல்லுவேன். சில ஆண்டுகளுக்கு முன்னால் இந்தியாவும் சீனாவும் "பாய் பாய்" என்று கூறிக் கொண்டார்கள்! இதை வேடிக்கைக்காகச் சொல்வதாக கருதாதீர்கள்! முன்னால் தோழமையோடு 'பாய் பாய்' சகோதரர்கள் என்று கூறிய அதே வாயால் இந்தோ—சீனி சோர் சோர் என்று கூறுகிறார்கள். சோர் என்றால் திருடர்கள் என்று பொருள்! முன்பு சகோதரர்களாக இருந்தவர்கள், இப்போது திருடர்களாகி விட்டார்கள்! இந்திய எல்லையை சீனர்கள் ஆக்ரமிக்கின்ற செய்தியை பத்திரிகை படிப்பவர்கள் அறிந்திருப்பார்கள் என்றே கருதுகிறேன்!

தோழமை என்பது தெளிவாக பேசத் தக்கது, ஆனால் நடைமுறையில் கடினமானதாகவே அமையும். தோழமை உணர்ச்சி பரவ வேண்டுமானால் மூன்று தடைக் கற்கள் இல்லாமல் இருக்கவேண்டும்! மனிதனுக்குள்ள பொறாமை பொச்செரிப்பு, வெறுப்பு இம் மூன்றையும் கடக்க வேண்டும்! இம் மூன்றும் இல்லாதவனிடத்திலே தான் தோழமையைக் காண முடியும்!

இங்கே பேசிய நண்பர்கள் பலர் மாற்றாரின் எதிர்ப்புகளுக்காளானதைப்பற்றி கூறினார்கள் நண்பர் ராமச்சந்திரனையும் கலை உலகிலே இருப்பவர்களில் சிலர் பொச்செரிப்போடும், பொறாமையோடும், வெறுப்போடும் பார்க்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும், அந்த பயங்கர சூழ்நிலை இவரை சூழ்ந்துகொண்டிருப்பதை நானறிவேன்!

கலை உலகிலே உள்ளவர்கள் உல்லாசபுரியிலே வாழ்பவர்கள்! உல்லாசமாக வாழவேண்டியவன், நம்மோடு இருக்கவேண்டியவன் போயும் போயும் அந்த கழகத்திலே சேர்ந்திருக்கிறானே என்று ராமச்சந்திரனை வெறுப்புக் கண்ணோடு பார்ப்பதும், அவருடைய வளர்ச்சியை தடைபடுத்துவதற்கு பயங்கரத் திட்டம் போடுவதும் எனக்கும் தெரியும், உலகத்திற்கும் தெரியும்! அவர்கள் செய்கிறார்களே என்பதற்காக நாமும் செய்தால் வெறுப்பும், விரோதமும் வளரும், இப்போதுள்ள வளர்ச்சியும் தடைப்படும்!

(7-ம் பக்கம் பார்க்க)

நாம் கேட்பது பிரிவினை அல்ல-விடுதலை!

காங்கிரஸ் ஆட்சியிலிருக்கும் கேடுபாடுகள் நீங்கினால் தான்

மக்கள் வாழ்வில் மலர்ச்சி ஏற்படும்!

வி. பி. ராமன் பேச்சு!



கொத்தவால் சாவடி தமிழர் விழாக் கமிட்டியின் சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாவின்போது வழக்கறிஞர் வி. பி. ராமன் பேசியதாவது:—

அன்புள்ள தலைவர் அவர்களே, நண்பர்களே, தாய்மார்களே! இங்கு இன்று நடைபெறும் பொங்கல் விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்பினை அளித்தமைக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்! இங்கு ஏராளமான மக்கள் கூடியிருக்கிறார்கள்! இந்த இடம் மிகவும் குறுகலானது! உட்கார்வதற்கும் வசதியற்று; மிகவும் கஷ்டப்படுகிறீர்கள்! இந்த இடத்தை விட்டு வேறு இடத்தில் இந்தக் கூட்டத்தை கூட்டியிருக்கலாம்.

நீங்கள் மிகவும் தொல்லையோடு உட்கார்ந்திருக்கும் இந்த நிலையில், நான் எனது கருத்துக்களைக் கூறவும் பயப்படுகிறேன்! இந்தக் கூட்டம் சரிவர நடைபெறுவதற்கு உங்களது ஒத்துழைப்பும், ஆதரவும் தேவைப்படுகிறது.

இங்கு ஒருவருக்கொருவர் நசுங்கும்படியான நிலையில் கூடியிருக்கிறீர்கள். இந்த மாதிரியாக பெருந்திரளாகக் கூடுவது நமது கழகக் கூட்டங்களுக்குத்தான்! மாற்றார் கூட்டங்களுக்கு கூட்டமே கூடுவதில்லை. நமது கூட்டங்களுக்கு வருகிறவர்கள் நமது கொள்கைகளை உணர்ந்து அவர்களுக்குப் பிடித்தமான— அவர்கள் தேவையெனக் கருதும் கருத்துக்களைக் கூறுகிறோம். சொல்வோம் என்ற எண்ணத்தில் ஏராளமாகக் கூடுகிறார்கள். மாற்றுக் கட்சிகள் கூட்டத்தில் கூடுபவர்கள், நம் கூட்டத்தில் மாற்றுக கட்சிக்காரர்கள் குறைவாகக் கூடுவார்கள். ஆனால் மாற்றுக் கட்சிக் கூட்டங்களில் கொள்கைகளை நம்புபவர்கள் குறைவாகக் கூடுவார்கள். ஆனால் வேடிக்கை பார்ப்பவர்கள் அதிகமாகக் கூடுவார்கள். காரணம் நம்முடைய தலைவர்கள் மீது கொண்டுள்ள பாசத்தின் மீதும், கொள்கைகள் மீது கொண்டுள்ள பற்றின் மீதும் லட்சியங்கள் மீதும் வைத்துள்ள ஆர்வத்தின் மீதும் தான் இப்படி ஏராளமாகக் கூடியிருக்கிறீர்கள். இந்த மாதிரி பாக்கியம் நம்முடைய கட்சிக்குத் தவிர வேறு யாருக்கும் கிடைக்காது!

இன்று இந்தக் கூட்டத்தில் எப்படி நெருக்கடியான நிலையில் கூடியிருக்கிறோமோ அதை விட நமது வாழ்க்கையில் மிக மிக ஆபத்தான, நெருக்கடியில் வாழ்கிறார்கள். வாழ்க்கையில் அடிப்படையிலேயே மிகவும் சிக்கலான நிலை மலிந்திருக்கிறது! கஞ்சிக்கு வகையற்று, வசிக்க வீடின்றியும் மோசமான நிலையில் நமது மக்கள் இன்று நமது நாட்டில் வாழ்ந்து வருகிறார்கள், கட்டுவதற்கு ஆடையின்றியும், வேலையற்றும் திண்டாடித் திரியும் நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலை மாற மக்களது தேவையைப் பூர்த்தி செய்ய இன்று எந்தக் கட்சியும் பணி செய்யவில்லை. மக்கள் பூர்த்தியை நிவர்த்திக்க இன்று நாட்டில் எந்த இயக்கமும் கிடையாது! இன்று நாட்டில் இவைகளையெல்லாம் கூறி வருவது நமது கழகமும், நமது தலைவர் அண்ணா அவர்களுமேயாகும்.

உணவு—உடை, வீடு இந்த மூன்று பிரச்சினைகளில் நம் மக்களுக்கிருக்கும் கஷ்டங்களை நீக்க நம்முடைய கழகமும், நமது தலைவர்களுமே பாடு பட்டு வருகிறார்கள். அதனாலேயே நமது கூட்டங்களுக்கு ஏராளமான மக்கள் கூடுகிறார்கள், இதைக் கண்டு நம்மீது பொறாமைப்பட்டு நம்மைத் தூற்றி வருகிறார்கள்.

நாம் நமது நாட்டில் பஞ்சமும் பசியும் மலிந்திருக்கிறது. மக்களுக்கு அன்றாடம் தேவைப்படும் விலைவாசிகள் உயர்ந்து மக்கள் வாங்கும் நிலையில்லாது தவிக்கிறார்கள் என்று கூறினால், நமது அமைச்சர்கள் மறுக்கவில்லை. இந்த நிலை இருக்கிற தென்பதையும் ஒப்புக் கொள்ளவும் செய்கிறார்கள்! அகவிலை ஏறியிருக்கிறதென்பதையும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால், அதை நீக்க எங்களால் என்ன செய்ய முடியும் என்று கூறி மழுப்புகிறார்கள்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இவைகள் எல்லாம் சரியாகிவிடும் என்றும், அதுபற்றி கவலைப் படாதீர்கள் என்றும் கூறி வந்தார்கள். ஆனால், அந்தத் திட்டங்கள் வந்ததும் ஒன்றும் நிலை மாற்றமடையவில்லை. மாற்றமடைவதற்குப் பதில் தொல்லைகள், கஷ்டங்கள் அதிகமாகிக் கொண்டே வருகிறது! மக்கள் வாழ்க்கையில் சுபீட்சம் ஏற்படவில்லை. உயர்ந்த நிலை மலரவில்லை, இப்போது கூறுகிறார்கள், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வந்தால் இவைகள் யாவும் சரியாகிவிடுமென்றும் கூறுகிறார்கள். நமது நாட்டில் விலைவாசிகள் முப்பதாண்டுகளுக்கு முன்பு இருந்ததையும் கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்ததையும், இன்று இருக்கும் நிலையையும் நீங்கள் சற்று எண்ணிப் பாருங்கள். இந்த நிலை ஏன் வந்தது. இந்த நிலை மாற நமது அமைச்சர்கள் என்ன செய்தார்கள். இதற்காக அவர்கள் செய்த காரியங்கள் என்ன?

கடந்த இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் நமது மாநிலத்திலுள்ள எதிர்க் கட்சிகளெல்லாம் ஒன்று சேர்ந்து விஷம் போல் ஏறிவரும் விலைவாசிகளைக் குறைத்து மக்கள் வாங்க முடியாது அல்லல்படுவதை நமது மாநில அமைச்சரவை கவனிக்க வேண்டுமென்றும் கேட்டார்கள். மக்களின் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள், அதை அமைச்சர்கள் கவனிக்கவில்லை அவைகளை நீக்கக் கூறிய காரணங்களையும் ஏற்கவில்லை!

அதற்குப் பதில் அதிகமாக விலைவாசிகள் ஏறிக்கொண்டே இருக்கிறது. குறைந்தது கிடையாது. அதற்கு அவர்கள் கூறும் ஒரே பதில் அவர்களை ஆட்சியிலிருந்து விரட்டவே இம்மாதிரி செய்கிறோம் என்று கூறுகிறார்கள்.

நீங்கள் சற்று கவனமாகக் கவனிக்க வேண்டும்!

உலகத்தில் ஏற்பட்டிருந்த யுத்தம் 1945-ல் முடிந்தது! அந்த யுத்தத்தால் ஜெர்மனியும், ஜப்பானும், சைனாவும் ஈடுபட்டிருந்தது! அதனால் அந்த நாடுகள் பல கஷ்டங்களுக்கு ஆளாகியது. ஆனால் அந்த நாடுகள் 1950-ல் தங்களுடைய நிலைமைகளைச் சரி செய்து பல அபிவிருத்திகளைச் சரி செய்து அவர்களுக்குத் தேவையானது போக நமக்குக் கடன் கொடுக்கும் நிலைக்கு வந்து விட்டது!

ஜப்பான் கடன் கொடுக்கிறேன் என்று கூறி முன் வருகிறது! ஜெர்மனி நமக்கு கனரக இரும்புகள் கொடுக்க முன் வந்திருக்கிறது! நமது நாட்டிலுள்ள அமைச்சர்கள் கையேந்தி வாங்கத் தயாராக இருக்கிறார்கள்! இது நமக்கு வெட்கமாக இல்லை!

நமக்குச் சுதந்திரம் வந்து சுமார் பதின்மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் கடன் வாங்கும் நிலையிலேயே இருக்கிறோம்! ஏன் இந்த நிலை? இது ஆட்சி கோளாறுதான். ஆட்சியில் இன்றிருக்கும் ஊழல்களும், ஆட்சியிலிருக்கும் கேடுகளும் நீங்கினாலன்றி அதைப் போக்க முயன்றாலன்றி இன்று மக்களுக்கிருக்கும் குறைபாடுகள் நீங்காது! மக்கள் நிலை இப்போதிருப்பதைவிட இன்னும் கேவலமான நிலைக்குத்தான் வரும்.

தென்னாட்டில் இன்றுள்ள நிலையை மாற்ற—இன்று மக்களுக்கிருக்கும் கஷ்டங்களைப் போக்க இன்றைய அமைச்சரவை என்ன செய்தது ஒன்

(11-ம் பக்கம் பார்க்க)

காவிரிக் கரையிலிருந்து ஆண்ட நாம் கங்கைக் கரைக்கு அடிமையானோம் !

பழம் பெருமை பேசுவதால் பயன் தராது! நாட்டு நலிவைப் போக்க நல்ல டாக்டர்கள் தேவை !

சென்னையில் கலைஞர் கருணாநிதி முழக்கம்!



சென்னை மணவழகர் மன்றத்தின் முத்தமிழ் விழாவின் மூன்றாம் நாளாகிய 7-2-60ம் நாள் கோகலே மண்டபத்தில் திருமதி சௌந்தரம் கைலாசம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் "பழந்தமிழகம்" என்ற பொருள் பற்றி கலைஞர் கருணாநிதி பேசியதாவது

மதிப்பிற்குரிய தலைமை வகித்திற்கும் அம்மையார் அவர்களே! நண்பர்களே! தாய்மார்களே! மணவழகர் மன்றம் கூட்டியிருக்கும் இக்கூட்டத்தில், எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு உங்கட்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மூன்றாண்டுகளாக இந்த மணவழகர் மன்றத்தார் முத்தமிழ் விழா என்ற பெயரால் ஒரு விழாவை நடத்தி, பழம் தமிழ் இலக்கியத்தைப் பற்றியும் தமிழ் வளர்ச்சி பற்றியும், தமிழகத்தின் பெருமைகளையும் மக்களுக்கு விளக்கி வருகிறார்கள். இந்த மாபெரும் தொண்டினைச் செய்து வரும் மணவழகர் மன்றத்திற்கு நாமெல்லாம் ஆதரவு தர வேண்டும்.

இம்மாதிரி தொண்டினைச் செய்து வரும் மணவழகர் மன்றத்தைப் பாராட்டுவதோடு இம்மன்றத்தின் தலைவர் எனது நண்பர் திரு கோகுலகிருஷ்ணன் அவர்களையும் நான் பாராட்டுகிறேன். கடந்த மூன்றாண்டுகளாக நடைபெறும் விழாக்களில் பல தமிழ் அறிஞர்களையும் தமிழுக்காகப் பாடுபட்டு வரும் தமிழ்த் தலைவர்களையும் அழைத்துப் பேசும் படி செய்கிறார்கள்.

முதலாண்டு விழாவிலும், இரண்டாவது ஆண்டு விழாவிலும் நான் கலந்து பேசியதாக எனக்கு நினைவிருக்கிறது. இவ்வாண்டு விழாவிலும் என்னை அழைத்து எனக்கு "பழந்தமிழகம்" என்ற பொருள் கொடுத்து பேசச் செய்திருக்கின்றனர். கடந்த இரண்டு ஆண்டு கூட்டத்தை விட, இவ்வாண்டு மிகச் சிறப்பாகவும், பெருமிதமாகவும் கூடியிருப்பதைக் கண்டு பெருமகிழ் வெய்துகிறேன்.

சென்ற ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில் கூடி இருந்ததை விட இவ்வாண்டு இரண்டு மடங்கு அதிகம்! சென்ற ஆண்டில் இக் கூட்டத்தில் பாதியளவு தான் கூடியிருந்தது. எனது நண்பர் கோகுல கிருஷ்ணனை சென்ற ஆண்டு என்ன வசூல் என்று கேட்டேன். 200 ரூபாய் என்று சொன்னார். இம்மாதிரி நல்ல காரியங்களுக்கு, நல்ல முயற்சிக்கு மக்கள் ஆதரவு கொடுக்கவில்லையே என்று மிக மிக வருந்தினேன். இவ்வாண்டும் எனது நண்பர் கோகுல கிருஷ்ணனை என்ன வசூல் என்று கேட்டேன், 450 ரூபாய் வசூலாகி யுள்ளது. இன்னும் மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்றார். அதைக் கேட்டு பெரு மகிழ்ச்சி யடைகிறேன்! அடுத்த ஆண்டு இதை விட இன்னும் ஆதரவு கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

நல்ல அறிஞர்களும், தமிழ் பெரியார்களும் வழங்கின்ற கருத்துக்களைக் கேட்டு மகிழ்ந்து வாழ்வில் பெரும் பயன் பெறுவதோடு, இம்மாதிரி கூட்டம் கூட்டுகின்றவர்களுக்கு உற்சாகத்தையும்—ஊக்கத்தையும் அளிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்:

இவ்விழாவை நடத்துகின்ற நண்பர் கோகுல கிருஷ்ணனுக்கும் இக்குழுவினருக்கும் ஒரு வேண்டுகோள்விடுக்க ஆசைப் படுகிறேன். அடுத்த ஆண்டு முதல் இவ்விழாவை பெரிய மைதானத்தில், பெரிய பந்தலை அமைத்து, அவ்விழாவில், நல்ல அறிஞர்களின் சொற்பொழிவுகளை நடத்தியும். தமிழ் பெரியார்களையும் அழைத்து பேச வைப்பதோடு, தமிழ் கலா நிகழ்ச்சிகளையும் செய்து மக்களுக்கு தமிழ் ஆர்வத்தை உண்டாக்கும் காரியங்களைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

முதல் நாள் அறிஞர் அண்ணா அவர்களும் டாக்டர் சிதம்பரநாதம் செட்டியார் அவர்களும் இரண்டாம் நாள் நாவலர்நெடுஞ்செழியன் அவர்களும், மற்றும் நமது தோழர்களும் நல்ல கருத்துக்களை உங்களுக்குத் தந்திருக்கிறார்கள்.

எனக்கு முன்னால் நண்பர் ஹமீது அவர்கள் இலக்கியம் என்பது பற்றி உங்களிடையே பேசினார். இலக்கியத்திலிருக்கும் சிறப்பைப் பற்றியும் இலக்கியத்தால் மனிதனுக்குப் பயன்படும் கருத்துக்களையும் நல்லமுறையில் விளக்கினார். அவர் இலக்கியங்களில் கூறப்படும் காதல் சிறப்பையும், இலக்கிய கர்த்தாக்கள் காதலைப் பற்றிக் கூறும் முறைகளைப் பற்றியும் மிகச் சிறப்பாக விளக்கினார்.

எனதருமை நண்பர் கவிஞர் கண்ணதாசன் அவர்கள் "பாத்திர படைப்பு" என்பது பற்றி கற்கண்டினும் இனிய முறையில் சுவையோடு பாத்திரப் படைப்புகள் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி நல்ல விளக்கங்கள் தந்தார்.

நான் இப்போது "பழந்தமிழகம்" என்பது பற்றிப் பேச முன் வந்திருக்கிறேன்.

என்னைப் பேசும் படி கேட்க வந்த போது என்ன பொருள் பற்றிப் பேசுகிறீர்கள் என்று கேட்டார்கள் நான் "பழம் தமிழகம்" என்ற பொருன் பற்றிப் பேசுவதாக ஒப்புக் கொண்டேன்.

"பழம் தமிழகம்" என்றால், "காய்த் தமிழகம்" "பிஞ்சுத் தமிழகம்" என்று ஒன்று இருக்கிறதா என்று கேட்கலாம்.

அப்படிப் பொருளல்ல பழங்காலத்தில் தமிழகம் எப்படி இருந்தது. பழந்தமிழர்கள் எப படி வாழ்ந்தார்கள் என்பதை ஆராய்வதற்கே இந்தப் பொருள் கொடுத்திருக்கிறோம்.

பழங்காலத் தமிழர்கள் கடவில் மூழ்கி முத்தெடுத்து கடல் கடந்து வாணிபம் புரிந்து தமிழகத்தின் பெருமையை எங்கும் எடுத்துக் காட்டி வந்தார்கள்.

பழந்தமிழர்கள் வந்தவர்களுக்கீந்து தாங்களும் நன் முறையில் சிறப்போடு வாழ்ந்து வந்தார்கள்.

பழந்தமிழர்கள் அடிமையின்றி, பெருமையோடு சுதந்திரமாக, பசியின்றி, பட்டினியின்றி ஈகையோடு தான தருமங்கள் செய்து வாழ்ந்து வந்தார்கள்,

இன்றைய தமிழர்கள் நிலையைப் பற்றி நான் அதிகமாக உங்களிடம் கூற வேண்டியதில்லை! வாழவகையின்றி கடல் கடந்து துன்பப்பட்டு, இன்னலடைந்து—துயரடைந்து அடிமைகளாக இருந்து வருகிறார்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

"அது யாரப்பா பாண்டியன்! நான் கேள்விபட்டதே இல்லையே!"

"அவன் ஒரு அன்னக்காவடி பேர் வழிங்க! என்னமோ நாட்டைப் பிடிக்க போறானும்! ஊரை ஆட்சி செய்யப் போறானும்!"

"என்னப்பா! புதுசா என்னமோ சொல்றே!"

"உண்மைதானம்மா! அந்த பசங்களால் தான் ஊரே குட்டிச்சுவராகிறது!"

"அவன் என்ன அப்படி செய்கிறான்!"

"பொடிப்பசங்களை யெல்லாம் சேத்துக் கிட்டு, ஊரை கொள்ளை யடித்துக் கொண்டு வருகிறான்!"

"சரி! அந்த கொள்ளைக்காரன் இப்போ எங்கே இருக்கான் தெரியுமா?"

அத்தியாயம் 32

"அம்மா! வண்டியெல்லாம் சுத்தம் செய்துவிட்டேன், எடுத்துக்கொண்டு வரட்டுமா!"

"ஓ! எடுத்துக் கொண்டு வாயேன்! பெட்ரோல் எல்லாம் இருக்கிறதா?"

"நெறைய இருக்கு! சுமார் 50 மைல்வரையில் போய் வரலாம்!'

"ஏ, டிரைவர்! நீ ஜீப் வண்டி ஓட்டி பழக்கம்தானே?

"அதென்னம்மா அப்படிகேட்டு விட்டீர்கள்! இந்த சூரப்புலி சுந்தரம் ஓட்டினால் வண்டியெல்லாம் பெட்ரோல் இல்லாமலேயே ஓடுமே!"

"உன் பெயர் சூரப்புலி சுந்தரமா?" கேலியோடு சிரிப்பையும் கலந்து கொண்டு வேள்விழி கேட்டாள்!

"என்னம்மா சிரிக்கிறீர்கள்!'

"ஒன்றுமில்லை ட்ரைவர்! நீ எதில் சூரப்புலி!"

"எல்லாத்திலும்தான் அம்மா"

"இதற்கு முன்பு யாரிடம் வேலைசெய்தாய்?"

"எத்தனையோ பேரிடம்வேலை செய்திருக்கிறேன்! கடைசியாக போலீஸ் அதிகாரி அருமைநாயகத்திடம் வேலை செய்தபோது தான் எனக்கு இந்தப் பட்டப் பெயர் வந்ததுங்க!"

"ஓ! போலீஸ் அதிகாரியே இந்தப் பட்டத்தைக் கொடுத்தாரா? அப்படியானால் நீ சூரப் புலியாகத்தான் இருப்பாய்!' வேல் விழி கிண்டல் செய்தாள்!

"என்னும்மா கிண்டல் செய்யிறீங்க!"

"கிண்டல் செய்யவில்லை சூரப் புலி! உன்னைப் பாராட்டத்தான் செய்கிறேன்! அதிருக்கட்டும் அருமைநாயகத்தை உனக்கு நன்றாகத் தெரியுமா?"

"தெரியுமாவது! அவரைத் தெரியும், அவருடைய பொண்ணைத் தெரியும், அவருடைய மருமகப் பிள்ளையைத் தெரியும்!' சூரப்புலி அடுக்கிக் கொண்டே போனான்!

"இம்! பிறகு...!' வேள் விழி புலன் விசாரிக்கத் தயாரானாள்!

"அவுங்க குடும்பத்தையேத் தெரியுமே!"

"அவுங்க குடும்பத்தையேத் தெரியுமா?" வேள்விழி உள்ளத்திலே கொஞ்சம் அச்சம் தலை காட்ட ஆரம்பித்தது!

"ஆமாம் அம்மா! நல்லாத் தெரியும்!"

"அவுங்க பொண்ணு!" வேள் விழி கதைக்கு அடியெடுத்துக் கொடுத்தாள்!

"அந்த பேச்சை மட்டும் எடுக்காதீங்க அம்மா!"

"ஏன் சூரப்புலி! அவள் கெட்டவளா?'

"கெட்டவளா? கெட்டவளினும் கேடு கெட்டவளாயிற்றே!"

"எதைக் கொண்டு சூரப்புலி அப்படிச் சொல்லுகிறாய்?"

"தாலி கட்டிய கணவனை விட்டு விட்டு கண்ட கண்டவனோடு அலைபவளை கெட்டவள் என்று தானே அம்மா சொல்ல வேண்டும்!"

"அந்த கணவன்கையாலாகாதவனாக இருக்கலாம்!"

"அப்படி சொல்லாதிங்க அம்மா! அவர் ரொம்ப கெட்டிக்காரர், திறமைசாலி"

"எதில் சூரப்புலி கெட்டிக்காரர்! சாப்பாட்டிலா?"

"அவர் ஒண்ணும் சாப்பாட்டு ராமனில்லை அம்மா!"

"சூரப் புலி! உனக்கேன் இப்படி கோபம் வருது! அவரைப் போல நீயும்...!"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை அம்மா! அவர் ரொம்ப நல்லவர் --அதனால்தான் எனக்கு கோபம் வந்தது!"

"அந்த ஆள் ஒரு முட்டாள் என்றல்லவா நான் கேள்விபட்டிருக்கிறேன்!"

"அப்படியெல்லாம் சொல்லாதீங்க அம்மா!"

"அதிருக்கட்டும்! அந்த போலீஸ் அதிகாரியின் மகள் இப்போது எங்கே இருக்கிறாள் தெரியுமா?"

"அதையேன் கேக்கிறீங்க! அவ, எவனோ பாண்டியனும், அவன்கூட சுத்திக்கிட்டு திரியுறா?"

"தெரியிலேயே அம்மா! தெரிஞ்சா சுட்டு வீழ்த்திவிட மாட்டேனா!"

"ஏன்? உனக்கு என்ன கெடுதலை செய்தான்!"

"அவன் செய்த கொடுமையால் தானே இந்த கதிக்கு வந்திருக்கேன் அம்மா!"

"என்ன கொடுமை அப்பா!"

"அதையெல்லாம் இப்போ கேக்காதிங்க அம்மா! அதைச் சொன்னால் என் ஆவியே பிரிந்து விடும்!"

"சரி! நீ போ, போயிட்டு பத்து மணிக்கு வா..." என்று எதையோ யோசித்தபடி வேல் விழி கூறினாள்!

"யார் இவள்! எல்லா விஷயங்களையும் புரிந்துகொண்டு சொல்லுகிறாளே! ஒரு வேளை ஒற்றனாக இருப்பாளோ! உளவறியத்தான் இங்கே வந்தாளோ? என்று யோசித்தவண்ணம் ஒரு நாற்காலியில் அமர்ந்தான்!

"யார் இவள்? இவளை எங்கேயோ பார்த்ததுபோல் இருக்கிறதே!" என்று யோசித்த வண்ணம் அவனும் திரும்பிச் சென்றான்!

"யாராக இருந்தால் நமக்கென்ன!, இவளை வைத்துக் கொண்டே நாம் காரியத்தை சாதித்துக் கொள்ள வேண்டும்! இதற்காகத்தானே நாம் இங்கே வந்தோம்" என்று சிந்தனையில் ஆழ்ந்தான்!

(தொடரும்)

மக்கள் உள்ளத்தை நம்பி தி.மு.கழகம் இருக்கிறதே தவிர இராச தந்திரத்தை நம்பி அல்ல !

அண்ணா பேச்சு
3-ம் பக்கத் தொடர்ச்சி

நடிகர்கள் பெயர் பெறுவதும், பணம் பெறுவதும் இயற்கையான காரியம். பணமும் புகழும் பெற்றுவிடலாம், மக்களின் அன்பைப் பெறுவது எளிதான காரியமல்ல! எனக்கு 51 வயதாகிறது! எனக்கு தெரிந்த அளவில் பணமும் புகழும் பெற்று, மக்களின் அன்பையும் பெற்றவர் கலைவாணர் என் எஸ். கிருஷ்ணன் ஆவார்கள், அவருக்கு அடுத்தபடியாக இருப்பவர் நண்பர் ராமச்சந்திரன்!

எவருக்கும் இல்லாத மக்கள் அன்பை, நண்பர் ராமச்சந்திரன் பெற்றிருப்பதாலே மாற்றாருக்கும் அவர்மீது விரோதம் ஏற்படுவது இயற்கைதான்!

நண்பர் ராமச்சந்திரன் இன்று உச்ச நிலையிலே இருக்கிறார். அவர் புகழ் பெற்று விட்டார் என்பதற்காக தூற்றுகிறார்கள்! அவர்கள் தூற்றுவதைக் கண்டு ராமச்சந்திரன் துவளவில்லை, மாறாக மேலும் உற்சாகத்தோடு பணி புரிகிறார். மாற்றுக் கட்சிக்காரர்கள் ஏசிப் பேசுகிறார்களே என்ற சலிப்பு ஏற்பட்டால் நண்பர் ராமச்சந்திரனை எண்ணிக் கொள்ளுங்கள்! எவ்வளவு கஷ்ட நஷ்டம் ஏற்பட்டாலும், உள்ளத்திலே ஊறி இருக்கின்ற கட்சிப் பற்று அவருக்கு புதிய உற்சாகத்தை தருகிறது!

நண்பர் ராமச்சந்திரனை யாரும் அழைக்கவில்லை. அவராகவே நம் கழகத்தில் சேர்ந்தார்! கலைஞனுக்கு அரசியல் வேண்டுமா, வேண்டாமா என்று பேசிவிட்டு வந்தவரல்ல; கலைஞனுக்கு அரசியலே கூடாது என்று சொல்லிவிட்டு இங்கு வந்தவரல்ல!

கலைஞன் யார் என்பதை அறிய வேண்டும். கலைஞனும் மனிதன்தான் என்று ஒப்புக் கொள்ள வேண்டும். நல்லவனாக இருந்தால்தான் மனிதன் என்று மதிக்கப்படுவான். நல்லவனாக வேண்டுமென்றால் நல்ல குணம் வேண்டும்! நல்லவன் என்று நாட்டு மக்கள் புகழ வேண்டுமானால் நல்லது செய்ய வேண்டும். இருக்கின்ற கேடுபாடுகளை களைய வேண்டும். இவைகளையும், கலைஞனுக்கு அரசியல் ஏன் என்று சொல்வதையும், ஆராய்ந்து பார்த்து அவர் கண்ட முடிவுபடி திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தார். நாமாக அவரை அழைத்து வரவில்லை!

கலை உலகிலே இருப்பவர்களில் இன்னும் சிலரையும் கழகத்திலே சேர்க்க முடியும். ஒரு தடவைக்கு நாலு தடவை அவர்களிடம் பேசினால், சுலபமாக மேடைக்கு அழைத்து வர முடியும். எவ்வளவு வேகமாக வருகிறார்களோ, அவ்வளவு வேகமாக போய் விடுவார்கள். இது அனுபவத்தில் கண்டது!

விரோதம், ஏழை—பணக்காரன் என்ற பேதம், ஜாதி பேதம் இவைகள் இல்லாத இடத்திலே தான் தோழமை மலரும்

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே சென்னை ரேடியோவில் 'தோழமை' என்பதைபற்றி பேசினேன். நண்பர் ராமச்சந்திரன் தோழமையின் இலக்கணம் குறித்து பேசிவரும்போது, நான் பேசியவைகளை நினைவுறுத்தப் போகிறார் என்று நினைத்தேன்; இந்த பொல்லாத மனிதர் பாதியிலேயே நிறுத்திக் கொண்டார்!

இன்று உண்மையில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கும் ஒரே செல்வம் தோழமைதான்!

இங்கே பேசிய நம்முடைய தோழர்கள், நம்மிடத்திலே டாட்டா, பிர்லா, மிட்டா, மிராசு இல்லை என்று குறைபட்டுக்கொண்டார்கள், நம்மிடத்திலே டாட்டா, பிர்லா போன்றவர்கள் இருந்தால் தோழமை மலராது!

உதாரணத்திற்கு ஒன்று சொல்லுவேன், இரண்டு பணக்காரர்கள் சந்திக்கும்போது பார்த்தால் தெரியும், அவர்கள் சிரிக்கையிலே பல் மட்டும் தெரியுமே தவிர—முகம் மலராது!

பாவனைக்காகவாவது சிரிக்காவிட்டால் வியாபாரம் கெட்டுவிடுமோ என்று அஞ்சுகிறார்கள்.

பணக்காரத் தம்பதிகள் காரில் போகிற போது பார்த்தால் தெரியும், காரில் அமர்ந்திருக்கும் தம்பதிகள் ஒருவரைக் கொருவர் பார்த்துக் கொள்ளக்கூட மாட்டார்கள். கணவன் ஒரு கதவுக்கு பக்கத்திலும், மனைவி மற்றொரு கதவுக்கு பக்கத்திலும் அமர்ந்திருப்பார்கள். கணவனை பார்க்கின்றவர்கள் சீமான் என்று சொல்லுவார்கள்! மனைவியை பார்ப்பவர்கள் சீமாட்டி என்று சொல்லுவார்கள். சீமான் சீமாட்டி என்று பார்க்க முடியுமே தவிர அவர்களிடத்திலே பற்று பாசத்தை காண முடியாது!

பணத்தை போல் தோழமையை எதிர்க்கும் சக்தி வேறெதுவும் கிடையாது!

பணக்காரன் தங்க அரைஞாண் அணிந்து கொண்டிருப்பான். அவனது பெட்டிச் சாவியை அரைஞாணில் முடித்து வைத்திருப்பான். இரவில் மனைவியின் கை, தவறி அந்த சாவியின் மீது பட்டால் கூட, திடீரென்று அந்த பணக்காரன் கண் விழித்து பார்த்து. மனைவியென்றும் பாராமல் 'ஏன் தொட்டாய்' என்று கேட்டு கோபித்துக் கொள்வான். மனைவி உறங்கி விட்டாளா, இல்லையா என்று பார்த்து-மனைவி உறங்காவிட்டாலும், உறங்குகின்ற வரை காத்திருந்து, அவளுக்கும் தெரியாமல் பெட்டியைத் திறந்து, பணத்தை எண்ணிப் பார்த்து சரியாக இருக்கிறது என்று தெரிந்தால்தான் நிம்மதியாக தூங்குவான்.

ஆகவேதான் அதுபோன்றவர்கள் நம் கழகத்திலே இல்லை. அவர்கள் இல்லாததால் தான், இந்த அளவு வளர்ச்சி பெற்றிருக்கிறோம். அப்படிப்பட்ட தோழமைக் கழகமாக திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது.

தோழமைக் கழகமாக நம் கழகம் இருப்பதால் தான் நமது அமைச்சர்கள்—ராஜகோபாலாச்சாரியாரும், அண்ணாத்துரையும் சேர்ந்து விடுவார்கள் என்று பேசுகிறார்கள். இப்போது இருக்கின்ற அரசியல் பிரச்னை இது தான்?

ஏன் அப்படி நினைக்கின்றார்கள். நம்முடைய தோழமை உணர்ச்சி கண்டு அச்சப் படுகின்றார்கள். அவர்கள் உள்ளத்திலே ஐயப்பாடு ஏற்படுகிறது. அதனால் தான், ராஜகோபாலாச்சாரியும் அண்ணாத்துரையும் ஒன்றாக சேர்ந்து விட்டார்கள் என்று பல மந்திரிகள் பேசிக் கொண்டு வருகிறார்கள்.

நான் மகிழ்ச்சியோடு சொல்லுகிறேன், நானும் ஆச்சாரியாரும் ஒவ்வொரு நாளும் சந்தித்து பேசுவதாக அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் சேர்ந்து விட்டால் நமது நிலை என்ன ஆகுமோ என்று பயப்படுகிறார்கள்! அவர்கள் பயப்படுவது நமக்கு லாபம்!

பெரும் புளியை மனதிலே வைத்திருப்பவன் பூனையைக் கண்டால்கூட பயப்படுவான். ஒண்டிக் கட்டையாக செல்லக்கூட அஞ்சுவான்! அதைப்போல், இருவரும் ஒன்று சேர்ந்துவிட்டால் காங்கிரசுக்கு கிடைக்க வேண்டிய ஓட்டு பறிபோய் விடுமோ என்ற பயம் அவர்களுக்கு! இது நமக்கு லாபம்!

நீங்கள் ஒன்று சேர்வதிலே என்ன லாபம் என்று காமராசர் என்னைக் கேட்டால் நான் பதில் சொல்ல தயாராக இருக்கிறேன். சேருவதால் எங்கள் லட்சியம் வெற்றி பெறும் என்றால் சேருவேன்! அது உங்களை பொறுப்பிலிருந்து இறக்க பயன்படும் என்றால் சேருவேன்; அது என்னைக் கெடுப்பதானால் சேர மாட்டேன். அது உங்களுக்கு கெட்டது என்றால் சேருவேன்!

நாங்கள் சேருவது தவறு என்றால், கேரளத்தில் உங்கள் நிலை என்ன? முஸ்லிம் லீக் வகுப்புவாதக் கட்சி என்று உங்களால் சொல்லப்படும் கட்சியில், ஏன் சேர்ந்தீர்கள்? அந்தக் கூட்டு நியாயமானால் மற்ற கட்சிகளின் கூட்டுறவை மட்டும் ஏன் இழிவாகப் பேசுகிறீர்கள்! இன்றையத் தினம் வெட்கங்கெட்ட முறையில் சண்டை போட்டுக் கொண்டு வேறு இருக்கிறீர்கள்? எந்தக் கட்சியோடும் திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டு சேராது. எந்தத் தனிப்பட்ட தலைவனை நம்பியும் திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை!

திராவிட முன்னேற்றக் கழகம் திட்டம் வைத்திருப்பது இராஜ தந்திரத்தை நம்பி அல்ல! மக்கள் உள்ளத்தை நம்பித்தான் இந்த இயக்கத்தை துவக்கினோம்! நாங்கள் பெற்றது கண்ணுங் கெட்டிய தூரம் மக்களை காண்கிறோமே இந்த மக்கள் சக்தியைத்தான்.

மக்கள் உள்ளத்தை எப்படி பெறுவது என்பது உங்களுக்கு தெரியுமா என்று சிலர் கேட்கிறார்கள். இந்த பத்தாண்டு காலத்தில் மக்கள் உள்ளத்தில் வேறெந்த கட்சிகள் இந்த அளவு இடம் பெற முடிந்ததில்லை.

ராஜகோபாலாச்சாரியாரோடு அண்ணாத்துரை சேர்ந்து விடுவார் என்று கூறுகிற காமராசர் எங்களோடு சேர்கிறாரா! காமராசர் ஒரு நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டால் அவரோடு சேருகிறேன்!

ராசகோபாலாச்சாரியார் ஆரம்பித்துள்ள சுதந்திரா கட்சியை ஒழிக்க வேண்டுமா—

(12-ம் பக்கம் பார்க்க)

மொழி அழிகிறது! நாடு நலிகிறது!

புலவர்களே என்ன செய்யப் போகிறீர்கள்?

இலக்கியங்களை ஆராய்வதோடு நிற்காதீர்கள்!

நாட்டு விடுதலைக்காகப் போராடவும் வாரீர்!

(கருணாநிதி பேச்சு)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்முடைய பழங்காலத் தமிழர்களின் பெருமைகளைப் பற்றி நமது நண்பர் கண்ணதாசன் அவர்களும், நண்பர் ஹமீது அவர்களும் நன்கு கூறினார்கள்.

நமது இலக்கியங்களில நமது பழங்காலப் பெருமைகளைப் பற்றிக் கூறியிருப்பதைப் பார்த்துப் பெருமைப் பட்டிருக்கிறோமே தவிர, இன்றைய நமது நிலையை எண்ணி அதைப் போக்க வகை செய்வதில் கவனம் செலுத்தவில்லை

இன்று நமது கூட்டத்தின் தலைவியார் சௌந்தரம் கைலாசம் அம்மையார் அவர்கள் பழம் தமிழ் இலக்கியத்தைப் பற்றிக் கூறும் போது அவ்வையார் பாடிய பாட்டொன்றைக் கூறி அதிலுள்ள பெருமையை நமக்கு விளக்கினார்.

அவ்வையார் விநாயகரைத் துதிக்கும் போது, அவரிடம் அருள் கேட்கும் போது பாலும் தெளிதேனும், பாகும் பருப்புமிவை நாலுங்கலந்துனக்கு நான் தருவேன். கோலஞ் செய் துங்கக் கரிமுகத்து தூய நன் மணியே: நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றுந்தா!

என்ற பாடலைப் பாடியதாகவும், அவ்வளவு இலக்கியச் சுவை நமது நூல்களிலிருப்பதாகவும் அதை படித்துப் பின்பற்ற வேண்டுமென்றும் கூறியதோடு அவ்வையாரின் பெருமையைப் பற்றியும் நமக்கு விளக்கினார்.

பாட்டு அழகாக இருக்கிறதே ஒழிய, அவ்வையாரின் பெருமைக்கு இழுக்கைத் தான் தருகிறது. "நாலு கொடுக்கிறேன், மூன்று கொடு" என்று அவ்வையார் பேரம் பேசுகிறார். 'மூன்று கொடுக்கிறேன். நாலு கொடு என்று கேட்டிருந்தால் அவ்வையாரின் கெட்டிக்காரத் தனத்தையும், திறமையையும் காட்டுவதாக இருந்திருக்கும் அவ்வையார் பாடிய பாட்டிலிருந்து பெண்களுக்கு இழுக்கே யன்றி உயர்வைத் தராது என்பதை அம்மையாருக்கு எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்!

பழங்காலப் புலவர்களைப்பற்றிக் கூறும்போது அவர்கள் பெருமையோடு இருந்தார்கள் என்று நமது அம்மையார் அவர்கள் கூறினார்கள்.

பழங்கால இலக்கியத்திலிருந்து பார்த்தால் பெருமையோடு இருந்ததாகத் தெரியவில்லை. அவ்வையார் நாலு கொடுக்கிறேன். மூன்று கொடு என்று பாடியதாகவும் [illegible] கூழுக்குப் பாடியதாகவும் இந்த மாதிரி புலவர்களின் பெருமையைக் குறைப்பதாக இருக்கிறதே ஒழிய பெருமைப் படும்படியாக இல்லை.

நமது இலக்கியங்களில் தமிழர்களின் வீரத்தையும், சுதந்திர தன்மையையும் கூறி இருக்கிறது. நமது தமிழ் மன்னர்கள் எப்படி சுதந்திரத்தோடு வாழ்ந்தார்கள் என்று கூறும் போது. அதைப் படிக்கும் போது நமக்கு பெருமையை அளிக்கிறது! அதே நேரத்தில் சில புலவர்கள் பாடியிருப்பதைப் பார்க்கும் போது அடிமைத் தன்மையையும் நினைவு படுத்துகிறது!

பழங்காலம் என்றால் என்ன என்பதைச் சற்று நாம் சிந்திக்க வேண்டும்!

நமனால் நடந்தவைகளைக் குறிப்பிடும் போது பழங்காலம் என்றும் இப்போது நடந்து கொண்டிருப்பதைக் குறிப்பிடும் போது நிகழ் காலம் என்றும் எதிர்காலத்தைக் குறிப்பிடும் போது வருங்காலம் என்றும் குறிப்பிடுகிறோம்.

பழங்கால நிகழ்ச்சிகளை—அன்றைய நிலையை நாம் பின்பற்ற வேண்டியவை பல இருக்கின்றன, அதே போன்று தள்ள வேண்டியவைகளுமிருக்கின்றன பண்டைய இலக்கியங்களில் நமது இன்றைய வாழ்க்கைக்கு வழி காட்டக் கூடிய அருமையான நூல்களிருக்கின்றன! நிகழ காலத்திலும் நாம் பின்பற்ற வேண்டிய அருமையான பொருள்கள் மலிந்து கிடக்கின்றன!

உதாரணமாக நமது வள்ளுவப் பெருந்தகை தந்துள்ள திருக்குறள் என்ற அந்த அரும் பெரும் நூலில் கூறியுள்ள அறிவுரைகள் எந்தக் காலத்திலும் ஏற்கக் கூடியதாக உள்ளது! அதைப் போன்று தொல் காப்பியம், புறநானூறு போன்றவைகளுமிருக்கின்றன!

நமது கவிஞர் கண்ணதாசன் படையல் படைப்பைப் பற்றி கூறும் போது நமது இலக்கியங்கள் என்று கூறுவனவற்றில் உள்ள சில ஓட்டைகளைப் பற்றியும் அதிலுள்ளப் படைப் புத்தன்மையைப் பற்றியும் கூறினர்.

அதைப்போன்று தான் திரைப் படங்களில் உள்ள விஷயங்களையும் கூறினர். இன்று திரைப் படங்கள் என்பது, படம் திரையிடப்படுவது போன்று இருக்கிறதே ஒழிய கருத்துக்கள் நிறைந்ததாகவோ, அறிவுக்குப் பொருத்தமானதாகவோ இல்லை.

அன்றைய நிலை வருவதற்கு அன்றைய தமிழன் வாழ்ந்தது போல் நாம் வாழ்வதற்கு, இன்றைய நிலையை மாற்றுவதற்கு நமது பணி என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும், அதற்கான செய்ய முயல வேண்டும், அப்படிச் செய்வதற்குத் தடையாக இருப்பனவற்றை அகற்ற வேண்டும்

இப்படி நாங்கள் கூறினால் எங்களை வேறு கண்ணோடு பார்க்கிறார்கள், எங்களுக்கு முட்டுக் கட்டைபோடுகிறார்கள்

பழந்தமிழகம் இங்கு அமைய வேண்டு மென்றால் அன்றைய தமிழர்கள் வாழ்ந்தது போல் வாழ வேண்டுமானால்—இன்றுள்ள அடிமை தனம் அகல வேண்டுமானால் அதற்காக நல்ல திறமையும் தகுதியும் படைத்தவர்கள் முன் வரவேண்டும் அப்படி வந்தால் தான் தைரியமாகவும், வீரத்தோடும் போராடுவார்கள் தடைகளை அகற்றுவார்கள்

ஒருவனுக்கு நோய் இருக்கிறது. இந்த நோயை அகற்ற—நீக்க—போக்க நல்ல மருத்துவனிடம் சிகிச்சை பெற வேண்டும், அப்படியில்லாமல் திறமையற்ற மருத்துவனிடம் சென்றால்—அவனிடம் சிகிச்சை பெற்றால் நோய் தீராது. அதற்குப் பதில் நோய் அதிகமாகும்!

அது போலத் தான் நமது தமிழகம் நல்ல வளர்ச்சியடைய தமிழ் மக்கள் நல்வாழ்வு வாழ நம் இலக்கியங்கள் காப்பாற்ற நல்லவர்கள் முன் வர வேண்டும்.

நமது முன்னோர்கள் வளர்த்த-பண்டைய அரசர்கள் போற்றிக் காப்பாற்றிய நமது மொழியை அழிக்க—ஒழிக்க முயற்சிகள் நடக்கிறது.

சீரோடும், சிறப்போடும் வாழ்ந்த நம் நாடு அடிமைப் பட்டிருக்கிறது.

நமது இலக்கியங்கள் அழிந்து போகும் வகைகள் நடைபெற்று வருகிறது. இதை பார்க்க நல்ல டாக்டர்கள் இல்லை. இப்படியே விட்டு விட்டால் நோய் முற்றிவிடுமோ என்ற பயம் நமக்குப் பிறக்கிறது.

உதாரணமாக சமீபத்தில் நான் திருச்சி மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். அப்போது என் மனைவிக்கு உடல் நிலை சரியில்லாது போயிற்று ஏதோ ஒரு டாக்டரிடம் காட்டினார்கள். அந்த டாக்டர் ஊசி போட்டிருக்கிறார். அவர் தவறாக விஷம் கலந்த மருந்தைக் கொண்டு ஊசி போட்டிருக்கிறார். உடனே என் மனைவிக்கு முகம் வீங்கி, கைகால் வீங்கி உடம்பே வீங்கி விட்டது. எனக்கு உடனே அறிவிக்கப்பட்டு சுற்றுப்பிரயாணத்திலிருந்து வந்தேன். என் மனைவியை அடையாளமே கண்டு பிடிக்க முடியவில்லை. அவ்வளவு பயங்கரமாக இருந்தது.

உடனே வேறொரு மருத்துவரிடம் காட்டப்பட்டது. அவர் இப்படி ஏன் வந்தது என்று எங்களைக் கேட்கவில்லை. பரிசோதித்தார். நிலைமையைத் தெரிந்து கொண்டார். வேறு ஊசி போட்டார்! அதாவது முன் போட்ட ஊசிக்கு மாற்றாக, உடனே என் மனைவியின் உடல் நிலை பழைய நிலைக்கு வந்தது.

இன்று தமிழகத்தில் பிடித்திருக்கும் நோயை அகற்ற நல்ல டாக்டர்கள் முற்படவில்லை!

பண்டைய தமிழன் கிரேக்கத்திலும், ரோமாபுரியிலும் சென்று இங்குள்ள பொருளைக் கொண்டு போய் வணிகம் செய்து அங்குள்ளோர் நமது திறமையைக் கண்டு புகழும்படி செய்தான். அந்த நாடுகளிலுள்ள சீமான்களும், பிரப்புக்களும் நமது பொருள்கள் மீது ஆசை கொண்டு வாங்கினார்கள் என்றெல்லாம் நமது இலக்கியங்கள் கூறுவதைக் காண்கிறோம், இங்கிலாந்து பிரான்ஸ் முதலிய மேலை நாடுகளுக்கு கடல் வழியாக நமது பண்டைய தமிழர்கள் சென்று நமது தொழில் நுட்பத்தையும் நமது தொழில் திறனையும் காட்டியதாக நமது பழம் நூல்கள் பகர்கிறது!

நமது நாட்டில் தயாராகும் ஆடைகளை மேல் நாட்டிலுள்ள சீமான்களும், சீமாட்டிகளும் விரும்பி, அணிந்தார்கள் என்று நாம் படித்திருக்கிறோம், ஆனால் இன்றோ பிறர்கையை எதிர்பார்க்கும் நிலையும், வேறு நாட்டில் சென்று அடிமை வேலை செய்ய வேண்டிய வாழ்வும் வந்து விட்டது. நம்முடைய தமிழ் வேந்தர்களான சேரன், செங்குட்டுவன் மானத்தோடும் வீரத்தோடும், பண்போடும் வாழ்ந்து வந்தான். "காவிரிக் கரையிலிருந்து கங்கைக் கரை வரை" அவர்கள் அரசு செலுத்தி ஆட்சி புரிந்து வந்தார்கள். இன்று கங்கைக்கரை யிலிருந்து நம்மை ஆட்சி செய்யும் நிலை இருக்கிறது

அந்த நிலை வர வேண்டாமா? அதற்காக தமிழறிஞர்களும், புலவர் பெரு மக்களும் பாடுபட வேண்டாமா?

(9-ம் பக்கம் பார்க்க)

எதிர்கால வாழ்வு ஏற்றம் பெற, பண்டைய இலக்கியங்கள் துணையாக இருக்கின்றன!

(கருணாநிதி பேச்சு)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

நமது புலவர் பெருமக்களும் நமது பழந்தமிழகம் போல் இன்றைய தமிழகம் வாழ்வதற்கான பணியில் ஈடுபட வேண்டும்!

மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு முன்பு கோவையில் முத்தமிழ் வளர்ச்சி மாநாடு ஒன்றை நமது தோழர்கள் கூட்டினார்கள்!

அந்த நேரம் நமது தாய் மொழியான தமிழுக்கு ஆபத்து ஏற்படும்படியான நேரம்! தமிழகத்திலுள்ள பல பெரும் புலவர்களை சிறப்பாக காலஞ்சென்ற திரு. சோமசுந்தர பாரதியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போன்றவர்களையெல்லாம் அழைக்கப்பட்டிருக்கிறது!

அந்த மாநாட்டிற்கு திரு. பாரதிதாசன் அவர்கள் தான் தலைமை வகித்திருக்கிறார்கள்.

நமது அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன் ஆகிய நமது தலைவர்களும், மற்றும் தோழர்கள் பலரும் கலந்து கொண்டார்கள். அந்த மாநாடு இரண்டு நாள் நடைபெற்றது! மாநாட்டுக்கு முதல் நாள் நான் பல வேலைகள் காரணமாகச் செல்லவில்லை! இரண்டாம் நாள் தான் சென்றேன்!

தமிழ் பேரறிஞர்களான ஔவை துரைசாமி பிள்ளை, வெள்ளை வாரணர் முதலியவர் அந்த மாநாட்டில் கலந்துகொண்டார்கள்.

முதல் நாள் தமிழ் வளர்ச்சிக்கான பல அரிய யோசனைகள் நடந்திருக்கும், நல்ல பல தீர்மானங்கள் நிறைவேற்றுவதற்கான ஆலோசனைகள் செய்திருப்பார்கள் என்று எண்ணியிருந்தேன். ஏனெனில் தமிழ் நாட்டிலுள்ள பிரபலமான தமிழறிஞர்கள் பலர் கலந்திருந்ததால் அவ்வாறு நினைத்திருந்தேன்.

ஆனால் அதற்கு மாறாக நடந்துவிட்டது.

இரண்டாம் நாள் சென்ற நான் நண்பர்களைக் கேட்டேன் முதல் நாள் என்ன நடந்தது என்று.

அவர்கள் சலிப்போடு கூறினார்கள் "இலக்கியம்" என்பது தமிழா? வட மொழியா என்பது பற்றி சர்ச்சை நடந்து கொண்டிருக்கிறது.

முதல் நாள் துவங்கிய சர்ச்சை இன்னும் முடியவில்லை. இன்னும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது என்று கூறினார்கள்!

என் மனம் வேதனைப்பட்டது. பத்து, பதினைந்தாயிரம் ரூபாய் செலவழித்து பந்தல் போட்டு, நாற்பது, ஐம்பதாயிரம் மக்களைக் கூட்டி வைத்துக் கொண்டு ஒரு சொல் தமிழா? வடமொழியா என்ற சர்ச்சைக்காக நேரம் செலவழிப்பதா என்ற சிந்தனை கிளம்பியது.

தலைமை வகித்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் அந்த சர்ச்சையில் முதன்மை வகித்து, பேச வருகிறவர்களையெல்லாம் அதைப் பற்றிப் பேசும்படியாகவே தூண்டி வந்தார்!

எனக்குப் பேசும்படியான வாய்ப்புக் கிடைத்தது. நானும் அது பற்றிப் பேசுவேன், என்று தலைவர் கூறினார்!

நான் பேச ஆரம்பிக்கும் போதே, ஒரு சொல் எந்த மொழியைச் சார்ந்தது என்பது பற்றி விவாதிப்பதற்கு இவ்வளவு பெரிய மாநாடு கூட்ட வேண்டியதில்லை. ஏராளமானப் பணச் செலவு செய்து, பெரும் மக்களைக் கூட்டி வைத்து பேச வேண்டியதில்லை! அதற்கு தமிழகத்திலிருக்கும் புலவர்கள்—தமிழறிஞர்கள் கூடி விவாதித்து முடிவு செய்தால் போதும் இந்த மாநாடு தமிழுக்கு வந்திருக்கும் ஆபத்தை—தமிழ் நாட்டிற்கு வந்திருக்கும் இழிவை போக்க இந்த மாநாடு கூட்டப்பட்டிருக்கிறது.

அதைப்பற்றி முடிவு செய்வதற்கும், வழி வகுப்பதற்கும் தமிழகத்திலுள்ள தமிழறிஞர்களையெல்லாம் அழைக்கப் பட்டிருக்கிறது. அவர்கள் ஆலோசனை தேவைப்படுகிறது. ஆகவே "இலக்கியம்" என்ற சொல் தமிழா? வட மொழியா? என்பதை புலவர்கள் கூடி முடிவு செய்து கொள்ளுங்கள் என்று பேசினேன். நான் அப்படி பேசியதைக கேட்ட புலவர்கள் கோபப்பட்டார்கள்!

ஏன் இங்கு இதைக் கூறுகிறேன் என்றால் நமது புலவர்களுக்கு—மொழிக்கு வந்த ஆபத்தைவிட, தமிழ் நாட்டின் இழிவைப் போக்குவதை விட, தங்களது ஆராய்ச்சித் திறனைக் காட்டுவதில் தான் அக்கரை ஏற்படுகிறது.

ஆகவே நமது புலவர்கள் பழம் தமிழகத்தின் பெருமையைப் பேசுவதோடு நின்று விடுவதோடு இன்றைய தமிழகத்தின் நிலையை உயர்த்தப் பாடுபட வேண்டும்.

திருக்குறளில் வள்ளுவப் பெருமான் கூறியுள்ள அறிவுரைகளையும், நமது மக்கள் உயர்வுக்காக—நமது வாழ்க்கை நலனுக்காக கூறியுள்ள உபதேசங்களையும் நாம் பின்பற்ற வேண்டும்.

நமது தமிழகத்தின் வீரத்தையும், தமிழனின் பெருமையையும் நமது இலக்கியமான புறநானூறு, அகநானூறு எடுத்தியம்புவதை நாம் பார்க்க வேண்டும்.

புறநானூற்றில் நமது தமிழகத்தின் வீரத்தையும், தமிழர்களின் போர் முறைப்பற்றியும் கூறி இருப்பதை நாம் கூர்ந்து பார்க்க வேண்டும்.

நாட்டின் மீது எதிரிகள் படை எடுத்து வந்ததை எதிர்க்க... போரிட தந்தையை அனுப்புகிறாள் ஒரு வீரத்தாய். எதிரிகளோடு வீரப்போரிட்டு குண்டுக்கிரையாகி தந்தை மரணமாகிறான். தனது அன்பிற்கும், ஆசைக்குக்குப் பாத்திரமான கணவனை அனுப்புகிறாள். அந்த மறகுலத்துத் தாய்! கணவனும் போரிட்டு மாள்கிறான். அந்தத் தாய் பின் போருக்கு யாரை அனுப்புவதென்று சிந்திக்கிறாள். தான் ஈன்றெடுதத ஒரே குழந்தை—அருமையாகச் சீராட்டி பாராட்டி வளர்த்த சின்னஞ்சிறு மழலைக் குழந்தை இருப்பது நினைவுக்கு வந்தது. அந்தக் குழந்தை தெருவிலே விளையாடிக் கொண்டிருக்கிறது! மற்ற குழந்தைகளோடு ஆனந்தமாக ஆடிப்பாடிக் கொண்டிருக்கிறது.

அந்த மழலைக் குழந்தையை வீட்டிற்கு அழைத்து வருகிறாள். குழலை வாரி முடிக்கிறாள். போருடையை அணிவிக்கிறாள். வாளை எடுத்துக் கையில் கொடுக்கிறாள். "உன் பாட்டன், தந்தை போனபடி நீ போருக்கு போ நாட்டைக் காக்க எதிரிகளோடு போரிடு—எதிரிக்குப் புறமுதுகிட்டு ஓடாதே வீரத்தோடு போரிடு" என்று கூறி போருக்கனுப்புகிறாள்.

தாய் சொல்லைக் கேட்டு அந்த சின்னஞ்சிறு குழந்தை நாட்டைக் கவர வந்த நயவஞ்சகர்களை வாட்டப் புறப்படுகிறான். அங்கு வீரப் போரிடுகிறான், ஆனால், எதிரிகளின் வாள் மார்பில் பாய்ந்து மடிக்கிறான்.

இந்தச் செய்தியை அந்த தாயிடம் கூறுகிறான் ஒருவன். "என் மகன் எப்படி இறந்தான், எதிரிகளின் வாள் என் மகன் மார்பில் பாய்ந்ததா, முதுகில் பாய்ந்ததா" என்று வினவுகிறாள்.

எதிரிகளின் வாள் உனது மகனின் முதுகில் பாய்ந்ததாக பொய் உரை பகர்கிறான். ஒரு பொல்லாதவன்!

வீரத் தாய்க்கு ஆத்திரம் வருகிறது. ஆவேசம் பிறக்கிறது! கதறுகிறாள், "வீர மரபில் உதித்த என் மைந்தனா எதிரிகளிடத்தில் புறமுதுகிட்டு ஓடி கோழையாகி மடிந்தான், அவன் பாட்டன், தந்தை எதிரிகளோடு வீரத்தோடு போரிட்டு மாண்டார்களே, அவர்கள் வழி வந்தவன் கோழையாக மாண்டான் என்பதை என்னால் கேட்கமுடியவில்லையே"

"இதற்காகவா அவனைப் பெற்றேன், பாலூட்டி வளர்த்தேன். தமிழர் மரபிற்கே இழுக்கைத் தேடித் தந்து விட்டானே அப்படி உண்மையாக இருக்குமானால்—அவன் புறமுதுகிட்டு மடிந்திருப்பானால் அந்தக் கோழைக்குப் பாலூட்டிய எனது மார்பை அறுத்தெறிவேன்" என்று வீர முழக்கமிட்டுக் கொண்டு தனது மகன் இறந்த களத்திற்கு ஓடுகிறாள்,

பிணக்குவியல்கள் குவிந்திருக்குமிடங்களில் தனது மகனின் பிணத்தைத் தேடுகிறாள்—தேடிக் கண்டுப் பிடிக்கிறாள், தனதுமகன் இறந்துகிடப்பதைப் பார்க்கிறாள். தனது மகனின் மார்பில் எதிரிகளின் வாள் பாய்ந்திருப்பதைக் காண்கிறாள். ஆனந்தங் கொள்கிறாள். தனது மகனின் வீரத்தை எண்ணிப் பெருமை கொள்கிறாள். தனது மகனைப் பற்றி பொய் உரை கூறியவனை சபிக்கிறாள்.

இது பண்டைய நிலையை—நமது பழந் தமிழகத்திலிருந்த வீரத்தை—நமது வீரத் தாய்மார்கள் காட்டிய நாட்டுப் பற்றை எடுத்துக் காட்டுகிறது.

ஆனால் இன்றைய நமது நிலை என்ன?

நமது மொழியையும், நமது நாட்டையும் அழிக்க—நமது பெருமையைக் குலைக்க—நம்மை அடிமைப் படுத்தி வாழ்வதற்கு வகையற்றவர்களாக்கி இருக்கிறார்கள் இதற்கு காரணம் என்ன என்று அறிந்தோமா? இலக்கியத்தில் இருக்கும் வீரத்தைப் பற்றிப் பேசினால் மட்டும் போதுமா? போக்க வழி வகுக்க வேண்டாமா?

இதற்கு நமது நாட்டிலுள்ள புலவர் பெரு மக்கள் முன் வர வேண்டாமா?

நம்முடைய மொழிக்குப் பதில் வேறு ஒரு மொழி ஆதிக்கம் செலுத்த வருகிறது. அதைத் தடுக்க வகையின்றி ஆதரிக்க முற்படுகிறார்கள் நமது தமிழர்கள்.

நமது நாட்டில் எல்லா வளமிருந்தும், நமது நாட்டில் எல்லாவிதமான பொருள்கள் விளைந்து அதை அனுபவிக்க முடியாது பிற நாட்டார் கையை எதிர்பார்க்க வேண்டியதாக இருக்கிறது!

நமது இலக்கியங்களில் பார்க்கிறோம்! நமது நாட்டு மிளகு, நமது நாட்டு வாசனை திரவியங்கள் நமது நாட்டு உடைகள் எல்லாம் மேல் நாட்டுக்கு அனுப்பி வந்தோம்! அதை மிக விரும்பி அங்கு வாங்கினார்கள் என்று.

அப்படி இருந்த நமது நிலை உண்ண உணவு இன்றி, உடுக்க உடையின்றி அடிமைகளாய்—கோழைகளாய் வாழ்கிறோம்.

இதை யெல்லாம் போக்க நல்ல அரசு வேண்டும், நல்ல உள்ளம் படைத்தவர்கள் வேண்டும், நமது பழம் பெருமையை வளர்க்கும் இலக்கியங்களை வளர்க்க வேண்டும். நமது பண்டைய வீரத்தை நினைவு படுத்தும் இந்த மன்றங்களுக்கு ஆதரவு தர வேண்டும். பழம் இலக்கியங்களைப் படித்து அன்றைய வீரங்களை ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும் திருவள்ளுவரின் திருக்குறளிலுள்ள உபதேசங்களைப் பின்பற்ற வேண்டுமென்று கூறி விடை பெறுகிறேன் என்று பேசினார்.

கலைஞர் கருணாநிதி பேச்சை முடிக்கும் போது மேலே கூறப்பட்ட புறநானூற்று வீரத்தாயின் வீரத்தைப் பற்றித் தான் புனைந்த அழகான பாடலை வீரத்தோடும், சுவையோடும் மக்கள் உணர்ச்சி பெறும் வகையில் பாடினார் அதைக் கேட்ட மக்கள் ஆரவாரம் செய்து கை ஒலி எழுப்பினர்.

மாணவர்தம் படை வரிசை-திருச்சியில்!

இடியென முழங்கினர், இளைஞரேறுகள் !

எதிர்ப்புகள் துகளாக எஃகுக் கோட்டை-எழுந்ததங்கே !

"மாணவத் தோழர்களே. வருக!" "இளைஞரேறுகளே வருக, வருக!" "மறுமலர்ச்சி வீரர்காள், வருக!" "அண்ணாவின் அருமைத் தம்பிகளே, வருக!"!

"நாவலர் போற்றும் நல்லவர்களே, வருக!"

"கலைஞர் போற்றும் கண்ணியவான்களே, வாரீர்!"

"திராவிடத்தின் சிங்கங்காள், வருக, வருக!"

—இன்னோரன்ன வாசகங்கள் பொறிக்கப்பட்ட வரவேற்பு 'பேனர்'கள்—இருபதுக்கும் மேற்பட்டன—திருச்சி தேவா மன்றத்திற்குச் செல்லும் வழி நெடுகிலும் காணப்பட்டன அன்று!

அன்றே குடியரசு தினம். அந்த விழாவினைக் கொண்டாட திருச்சி நகரின் பற்பல இடங்களிலே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன, அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர்களிலே கூட ஓரிருவர் அங்கு வந்திருந்தனர், விழாவினைச் சிறப்பிக்க—விழாவின அருமை பெருமைகளை,—பெரிய மனது வைத்து தாம் பேசுகின்ற கூட்டங்களுக்கு 'விஜயம்' செய்திருந்தோருக்கு எடுததுரைக்க!

இரு விழாக்களும்—ஒன்று அரசாங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டது, மற்றொன்று எழுச்சி கொண்ட மாணவர் படை வரிசை தாய்க் கழகத்தினரின் துணை கொண்டு செய்த கை வரிசை—இந்த இரண்டும் ஒன்றோடொன்று போட்டியிட்ட அந்தச் சந்தர்ப்பம், காட்சி, காணற்கரியது-மட்டுமல்ல, மன எழுச்சியின் முன்னாலே எந்த சக்தியும் எதிர்த்து நின்றிட இயலாது என்பதற்கு ஈடு இணையற்றதோர் எடுத்துக் காட்டு!

காலை 9 மணிககு மாணவர் தம் மாநாடு துவக்கப்பட விருந்தது, தேவர் மன்றத்தில்!

"இவர்களென்ன கற்றுக் குடிகள், என்ன சாதித்து விட முடியும் இவர்களால்," என்று எதிர் முகாமிலிருந்து ஏளனம் பேசியோர் தம் வாயடைக்கச் செய்வது போல், ஏராளமான ஆதரவு—அதுவும் எதிர்பார்த்திருக்க முடியாத அளவுக்கு—பொது மக்களிடமிருந்து கிடைத்திருந்தது!

காலை 8 மணிக்கே பெருங் கூட்டம் தேவர் மன்றத்தின் நுழைவு வாயிலில்!

நுழைவுக் கட்டணத்தை செலுத்தி முதலில் மன்றத்தில் இடம் பெற்றாக வேண்டும் என்ற துடிப்பு தெரிந்தது கூடியிருந்தோரது, முகங்களில்!

மன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஓடியாடித் திரிந்து கொண்டு, ஏற்பாடுகளனைத்தும் சரியாக இருக்கின்றனவா என்று சரி பார்த்துக் கொண்டிருந்தது, ஒரு ஒல்லியான உருவம்—கையில் 'பைலுடன்'! அவர் தான் மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் திரு எம், எஸ். வெங்கடாசலம், எம். ஏ. "ஹோம் லண்ட்" இதழின் துணை ஆசிரியர்—சட்டக் கல்லூரியிலே பயின்று கொண்டிருப்பவர்!

அவரோடு உடனிருந்து அதை அப்படிச் செய்யலாம், இதை இப்படிச் செய்யலாம். இங்கே இவரை அனுப்புங்கள், 'புக்கிங்' கிலே அவரை அமர்த்துங்கள்,

வரவேற்புரை நிகழ்த்துகிறார் எம். எஸ். வெங்கடாசலம், எம், ஏ.

நுழைவு வாயிலுக்கு இதோ இவர்" என்று யோசனைகள் கூறிக் கொண்டிருந்தார், நகர தி. மு. க. செயலாளர் திரு. எம் எஸ். மணி அவர்கள்!

இவருக்கும் ஒரு ஒற்றுமை—பெயர்களுக்கு முன்னாலிருக்கும் "எம். எஸ்." என்ற எழுத்துக்கள்!

"இருவரும் அண்ணன் தம்பிகளா?"—இது எனதுள்ளத்திலே எழுந்த கேள்வி! இதே கேள்வி மற்றும் பலரது உள்ளங்களிலே எழுந்திருக்கக் கூடும்! காரணம், கூட்டத்திலேயிருந்த ஒரு நண்பர் இதே கேள்வியை என்னிடம் ஓடி வந்து கேட்டார்—"இருககு." என்ற பதிலைப் பெற்றுச் சென்றார்!

x x x

காலை 10 மணியளவில் மாநாடு துவக்கப் பெற்றது. துவக்கத்திலேயே தேவர் மன்றம் நிறைந்திருந்தும்—தடைகள் பலவற்றையும் மீறி, எதிர்ப்புக்களைச் சமாளித்துக் கொண்டு மாநாட்டிற்கு வந்திருந்தனர் ஏராளமான மாணவர்கள்!

முதலில் வரவேற்புரை. அதில் மாணவர் கழக வரலாற்றினைப் படம் பிடித்துக் காட்டி, அதன் தேவையினை விளக்கி, தாய்க் கழகத்திற்கு எந்த எந்த வகையிலே பயனுள்ளதாகத் திகழ முடியும் என்று எடுத்துக் காட்டிப் பேசியதோடு, திருச்சி நகரத்தைப் பொறுத்த அளவில் மாணவர் கழகத்தை வளர்ப்பதென்பது எவ்வளவு கடினம் என்றும் படம் பிடித்துக் காட்டினார், வரவேற்புக் குழுத் தலைவர் திரு எம். எஸ். வெங்கடாசலம் "இங்கேயுள்ள இரண்டு கல்லூரிகள், உங்களுக்கு நன்றாகத் தெரியும், அவை மாணவர்களின் முன்னேற்றத்திற்கான வழிவகைகள் என்ன, அவர்கள் ஒவ்வொருவரும் பெற்றிருக்கின்ற தனித் திறமைகள் என்னென்ன, அந்தத் திறமைகள் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் பயன்படும்படிச் செய்வது எப்படி—என்ற இப்படிப்பட்டவற்றில் கவனம் செலுத்துவதை விட்டு விட்டு, ஒவ்வொரு மாணவனின் நிறமும் என்ன என்ன என்று துருவித் துருவி ஆராய்வதிலே ஈடுபட்டிருக்கின்றன. 'அண்ணா' என்ற வார்த்தை மாணவர்களிலே யார் வாயிலேயிருந்தாவது வந்தால், ஆகா, அப்படியா செய்தான்: என்று ஆத்திரமடைவதும்—'நாவலா' என்று உச்சரித்தவன் நாசகாலன் என்று பிரசாரம் செய்வது மட்டுமல்ல, அவனுக்குப் படுகுழி தோண்ட வாய்ப்பு எப்போது கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பதும்—'கலைஞர்' என்றால் கண்களை அகல, விரித்து, புருவத்தை நெறிப்பதும்-'புரட்சி' என்று சொல்லிவிட்டால், பார்க்கிறேன் ஒரு கை என்று சவால் விடுவதும—அங்கெல்லாம் சாதாரணமான, அன்றாட நிகழ்ச்சிகள்! இவற்றையெல்லாம் மீறித் தான் மாணவர் கழகம் இங்கே தலையெடுத்தாக வேண்டும்" என்று திருச்சி சூழ்நிலையை மிக நல்ல முறையிலும் உருக்கமாகவும் படம் பிடித்துக் காட்டினார் அவர்.

பின்னர் திறப்பாளர் திரு. பீ. நெடுமாறன் அவர்களது உரை. நான்கு ஆண்டுகட்கு முன்னாலே "தென்றல்" இதழால் நடத்தப் பெற்ற பெருங் கதைப் போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசு பெற்றவர். இரத்தினச் சுருக்கமான அவரது பேச்சில், திராவிடம் பற்றிய பல ஆராய்ச்சிக் கருத்துக்களும், மேதைகளின் விளக்கங்களும் வெளியிடப்பட்டதோடு, திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் எந்த வகையிலே தாயகத்திற்கும் தாய்க் கழகத்திற்கும், துணை நிற்கவும் தொண்டு செய்யவும் முடியுமென்பதை எடுத்துக் காட்டினார்.

அடுத்து – தலைவரை முன் மொழிதல், வழி மொழிதல் நடைபெற்ற பிறகு, மாநாட்டுத் தலைவர் திரு.உ, பில்லப்பன்,எம். ஏ. கருத்துச் செறிவும், நயமும் மிக்கதோர் உரை நிகழ்த்தினர்.

"இந்த மாநாட்டிலே ஒரு வேடிக்கை என்ன வென்றால், தலைவர், திறப்பாளர், வரவேற்புக் குழுத் தலைவர் அனைவருமே உடல் மெலிந்தவர்கள்—ஆனால் உள்ள உரம் பெற்றவர்கள்" என்று தலைவரை வழிமொழிந்து பேசும் போது ஒரு தோழர் கூறிய கூற்றை மெய்ப்பிப்பதைப் போன்றிருந்தது தலைமையுரை! புயலென முழங்கிய அந்த முழக்கம், மன்றத்திலிருந்தோர் அனைவரது உள்ளத்திலும் ஒரு எழுச்சியை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்று திடமாக நம்பச் செய்யும் வகையில் மூச்சு விட்டாலும் கேட்கக் கூடிய முறையில் அமைதி நிலவியது அங்கே! அனைவரது கண்களும் தலைவர் பால்—காதுகள் அவர் தம் உரையின் ஆழததை சுவைத்திருந்தன, கருத்தும் அப்படித் தான்!

பின்னர் பேபி சசிகலா, ஜே. எஸ். இராசு, தி. அழகிரிசாமி முதலியோர் பேசினர். நமது தாய்க் கழகத்தைத் தூற்றித் திரியும் அமைச்சர்களுக்கும், அவர் தம் அடிவருடிகட்கும் காரசாரமான பதில் அளித்தார் திரு. அழகிரிசாமி. அந்த உரையோடு மாநாட்டு முற்பகல் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

நிகழ்ச்சிகள் டி. பி. ஜெகந்நாதன் குழுவினரின் இன்னிசையோடு வெகு விமரிசையாகத் துவங்கியது.

(11-ம் பக்கம் பார்க்க)

திராவிட முன்னேற்றக் கழகம் தேசிய விடுதலை இயக்கம்!

(வி, பி, ராமன் பேச்சு)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

றும் செய்யவில்லை! அதற்காகவேதான் நமது திராவிட முன்னேற்றக் கழகம் நமது நாடு பிரிய வேண்டும். நமது நாட்டு நிலையை நாமே கவனிக்க வேண்டும்! அதற்காக இன்னொருவரை எதிர்பார்க்கக் கூடாது!

இன்று நமது நாட்டிற்காகத் திட்டப்படும் திட்டங்களும், காரியங்களும் தென்னகத்தின் நலத்திற்காகவும், தென்னகத்தின் வளத்திற்காகவும், தென்னகத்திலுள்ள வறுமையைப் போக்கவும் வழி செய்யவில்லை. வடநாட்டின் வளத்திற்கும், வட நாட்டு மக்களின் நல் வாழ்விற்கும் வகை கரும்படியாக இருக்கிறது. அதனால் தென்னாடு பிரிந்து திராவிட நாடாக வேண்டுமென்று கூறுகிறோம்! நம்முடைய நாட்டுக்கான திட்டங்களை வகுக்கும் உரிமை அதிகாரம் நமக்கிருக்க வேண்டும் என்று கூறுகிறோம்! நம்மை ஆள்பவர்கள் வடக்கு—தெற்கென்று பேதம் காட்டி பாரபட்சம் காட்டுகிறார்கள்! ஆகவே நாம் வடக்கிலிருந்து பிரிய வேண்டுமென்று கூறுகிறோம்! இதைக் கண்டு நம்மை கேலி செய்கிறார்கள்!

உலகமெங்கிலும் இந்தியா ஒன்றில்தான். வடக்கு—தெற்கு என்ற பிரிவினையைக் காண்கிறோம்! வேறு எந்த நாட்டிலும் இந்த பேதத்தைக் காண முடியாது! ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், அமெரிக்காவிலும், ரஷ்யாவிலும் வடக்கு—தெற்கு என்ற பேதங்கள் இல்லை! அங்கு பாரபட்சமான நிலை இல்லை! பிரிவு எண்ணங்கள் இல்லை! ஒரே இனமாக வாழ்கிறார்கள். இங்கு ஒரே இனமாக வாழமுடியாது! தெற்கில் இருப்பவர்களிடையே இன வேற்றுமை இருந்து வருகிறது. தென்னாட்டார் ஓரினத்தார், வட நாட்டார் ஓரினத்தார். இது நாம் கூறவில்லை. இந்திய சரித்திரம் என்பதே கூறுகிறது!

சமீபத்தில் இந்திய சரித்திராசிரியர் திரு. நீலகண்ட சாஸ்திரியார், 'இந்து'ப் பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்! அதில் தென்னிந்திய சரித்திரங்கள் (சௌத் இந்தியன் இஸ்டிரி) என்று எழுதியுள்ளார்! அப்படியானால் தென்னாடு என்பது தனி நாடு என்பதுதானே பொருள்! சரித்திர ஆசிரியரே தென்னாடு என்று கூறுகிறார்! அப்படியானால் வட நாடு என்று ஒன்று இருக்கிறது என்பது தெரிகிறதல்லவா? அது மட்டுமா இந்திய சரித்திரத்தில் வடவர் கலாச்சாரம் வேறு, தென்னவர் கலாச்சாரம் வேறு என்று எழுதப்பட்டிருக்கிறது!

நமக்கும், அவர்களுக்கும் பல மாறுபாடுகளும் நிறைய இருந்து வருகிறது! இந்தியப் பிரதமர் நேரு அவர்களே தென்னாடு ஒன்று இருக்கிறது என்பதை தமது பேச்சில் கூறுகிறார். சமீபத்தில் அவர் பேசும் போது திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்களால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சுதந்திர கட்சியைப் பற்றி பேசும் போது, "அது தென்னாட்டில் ஆரம்பிக்கப்பட்ட கட்சி, அதனால் ஒன்றும் செய்ய முடியாது" என்று கூறுகிறார். அப்படியானால் வடநாடு ஒன்றிருக்கிறது, தென்னாடு ஒன்றிருக்கிறது என்பதுதானே பொருள். அவர் கூறும்போது "சௌத்" என்றே கூறுகிறார். பண்டித நேருவே, தென்னாடு வேறு, வட நாடு வேறு என்று பிரிக்கவில்லையா? நாம் சொன்னால் மட்டும் கோபப்படுவதேன்?

ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஏக இந்தியா பேசுபவர். அவர் ஆரம்பிக்கப்பட்ட கட்சி ஏக இந்தியா கட்சி அப்படி இருந்தும் அக்கட்சியை "சௌத் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட கட்சி" என்றால் அதன் நோக்கம் என்ன? வடக்கிலுள்ளவர்களைத் திருப்தி படுத்தவே அவ்வாறு கூறுகிறார்.

"சுதந்தரக் கட்சி தென்னாட்டவரால், தென்னாட்டில் ஆரம்பிக்கப்பட்டது! அதனால் ஒன்றும் செய்ய முடியாது, நீங்கள் பயப்படாதீர்கள்" என்று வடக்கிலுள்ளவர்களை தைரியப்படுத்தவே அவ்வாறு சொல்லியிருக்கிறார்.

இதைக் கூறுவதால் சுதந்திரக் கட்சியை ஆதரிக்கிறேன் என்று கருதவேண்டாம். நான் அதன் கொள்கைகளை ஒப்புக் கொள்ளாதவன் திராவிடநாடு பிரிய வேண்டுமென்று கூறுபவன். இருந்தாலும், வடக்கிலுள்ள பெரியவாகளிலிருந்து, சிறியவர்கள் வரை தென்னாட்டைப்பற்றி அவர்கள் கொண்டுள்ள எண்ணத்தைக் கூறவே கூறுகிறேன்.

இன்று வட நாட்டார் நமக்கு முதலாளிகளாகவும், தென்னாட்டவராகிய நாம் அடிமைகளாகவும் இருநது வருகிறோம்!

பலாத்காரமாக ஒட்டப் பட்டிருக்கிறோம். அந்தப் பிடியிலிருந்து விடுதலை ஆகவேண்டும் என்று தான் இனறு கூறுகிறோம்.

1947ம் ஆண்டு இந்திய ஒரே நாடாக இருந்தது. வெள்ளைக்காரன் இந்தியாவை காங்கிரஸ் தலைவர்களிடம் ஒப்படைக்கும் போது ஒன்றாக இருந்தது. ஒன்றாக இருக்க விரும்பாதவர்கள், கலாச்சாரத்தாலும், பண்பாலும், கலையாலும் மாறுபட்டவர்கள் பிரிந்துபோக விரும்பினார்கள். பிரிந்தார்கள் இப்போது இரண்டாக மாறியது! ஒரு வீட்டில் கூடப் பிறந்த அண்ணன் தம்பிகள் வாழ்கிறார்கள் அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டு பேதம் தோன்றி வீட்டிலிருந்து பிரிந்து போக ஒருவர் நினைத்தால், அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் அவர்களுக்குச் சமாதானம் கூறி, சகோதரத்துவத்தைக் கூறி ஒன்றுபடுத்தலாம். ஏனெனில் அவர்கள் இருவரும் இரத்த பாச முடையவர்கள் ஒரே எண்ணம் படைத்த தலைவர்கள். சமாதானத்தால் ஒற்றுமைப் படுத்தி விடலாம். ஆனல் நம்மைச் சமாதானப்படுத்தி ஒன்றாக்க முடியாது! நம்முடைய, கலை, கலாச்சாரம், பண்பாடு எல்லாம் வேறுபாடு! இனத்தால் வேறுபட்டவர்கள், எண்ணத்தால் வேறுபட்டவர்கள். நாம் சுதந்திரமாக வாழ்ந்து வந்தோம். உரிமையோடு வாழ்ந்து வந்தோம். இன்று அடிமையாக இருக்கிறோம்! இன்று விடுதலை கோருகிறோம். இழந்த உரிமையைக் கேட்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் தேசிய விடுதலை இயக்கம். அது தனது நாட்டு விடுதலைக்காகப் பாடுபடுகிறது! அது தெரியாது! பிரிவினைக்காரர்கள், தூண்டுபவர்கள் என்று கேட்டால் என்ன பயன்? தெற்கு, வடக்கு பேசுபவர்கள் என்று இழிவாகப் பேசினால் என்ன பயன்? அவர்கள் பேசுவதைப் பற்றிக் கவலைப் படாது நமது பணியை நாம் செய்து வர வேண்டியதுதான். மற்றும் காங்கிரஸ் தலைவர்கள் தெற்கு தேய்கிறது. வடக்கு வாழ்கிறது என்று கூறுவதற்கு கேலி செய்தார்கள். தெற்கு வாழ்வதற்கு என்ன திட்டம் என்றார்கள், நமது தலைவர் அண்ணா அவர்கள் நல்ல திட்டம் தந்தார்கள்! தென்னகம் வாழ நல்லெண்ணம் படைத்தவர்களானால் 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பத்தில் ஒரு பாகம் தென்னகத்திற்கு ஒதுக்குங்கள், அதாவது பத்துக் கோடி ரூபாய் செலவு செய்யத் திட்டமிட்டால், ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்குங்கள். அதைக் கொண்டு தென்னகத்தின் வளர்ச்சிக்கான பல வேலைகளைச் செய்யுங்கள். மக்களின் நலனுக்கான பல அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்துங்கள் என்று அண்ணா கூறினார், ஆனல் நமது அமைச்சர்களான காமராசருக்கோ, சுப்பிரமணியத்திற்கோ டில்லியில் நேருவிடம் போய் கேட்பதற்கோ, போராடுவதற்கோ, தைரியமோ, நெஞ்சுறுதியோ, திராணியோ இல்லாது, திட்டம் தந்த அண்ணாவைத் தூற்றுகிறார்கள்! அவர்கள் தூற்றலுக்கெல்லாம் கவலைபபடாது, நமது பணிகள் வெற்றி பெற, நமது நாடு விடுதலை அடைய பாடுபடும்படியும் ஒத்துழைக்கும்படியும், ஆதரவு தரும்படியும் கேட்டுக் கொள்கிறேன். மேலும் எனக்குப் பின்னால் நண்பர் சம்பத் அவர்கள் பேசப் போவதால் நீங்கள் அமைதியுடனும், கட்டுப்பாடுடனும் இருக்கும்படி கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

"திராவிடத்தின் தொழில் வளம்" என்ற தலைப்பில் திரு. பூவை. பி.இராமானுசம் B.Com, (Hons) சிறந்ததோர் உரை ஆற்றினர்.

"மாணவர்கள், இன்று,நேற்று நாளை" என்ற தலைப்பில் மாணவர் தம் பணி குறித்துப் பேசினார் தோழர் சா. பெ. மலைச்சாமி அவாகள்.

மாணவர் கழகம் நல்ல முறையிலே வளருவதை குறித்து யார் யார் எப்படி யெப்படி யெல்லாம் ஆத்திரப்படுகிறார்கள், பொருமைப்படுகிறார்கள், என்னென்ன சொல்லிச் சாடுகிறார்கள், பழிகளைச் சுமத்துகிறார்கள் என்று விளக்கமளித்தார் தோழர் உ, கணபதி, எம். ஏ. அவர்கள்.

தாயகத்திற்குப் பணி புரிவதே நமது நோக்கம், அதை யார் தடுத்தாலும் செய்தே திருவோம் என முழங்கினர் தோழர் இரா, வெங்கடேசன் எம்.ஏ.! விடுதலை யுணர்ச்சி, வேட்கை, மாணவர்களை ஈர்த்தே தீரும், இதைக் கண்டு வேதனைப் படுவோர் படட்டும், ஆத்திரம் கொள்வோர் கொள்ளட்டும், அவதூறு செய்வோர் செய்யட்டும், நாம் நம் வழி நடப்போம் எதைப் பற்றியும் கவலைப்படாமல், என்று மாணவர் கழகம் நடக்க வேண்டிய பாதையை அழகாகச் சுட்டிக் காட்டினர் தோழர் எம். கருப்புசாமி, பி.ஏ.

திராவிட நாடு கோரிக்கை நியாயமானது மட்டுமல்ல, தேவையானதும் கூட, என்று பற்பல ஆதாரங்களோடு அழகாக எடுத்துக் காட்டினார் தோழர் வே. சௌந்திரராசன், B. A. B. L.

"மாணவர்கள் ஏன் திராவிட முன்னேற்றக் கழகத்தினால் ஈர்க்கப்படுகிறார்கள்? என்ற தலைப்பில் சிறந்ததோர் உரை ஆற்றினர் தோழர் கோவை. செழியன், பி. ஏ. அவர்கள்,

அடுத்துப் பேசிய தோழர் டி. கே. பொன்னுவேலு பி. ஏ. அவர்கள் கருத்தாழம் மிக்கதோர் உரை ஆற்றினர், திராவிடத்தின் பொருளாதார நிலையைச் சீர்திருத்தும் வழிவகைகளென்ன என்பது பற்றி சிறந்ததோர் விளக்க மளித்தார்.

பின்னர் நன்றியுரை—வரவேற்புக் குழுத் தலைவர் பேசினா.

இறுதியாக மாணவர் கழகப் பொதுச் செயலாளர் திரு, எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் மாநாட்டின் சிறப்பினை எடுத்துக் காட்டி, அந்த அளவு சிறப்பாக மாநாட்டை நடத்திக் காட்டிய வரவேற்புக் குழுவினரைப் பாராட்டினர்.

"இந்த மாநாட்டில், செலவு போக மீதம் ரூ 600 என்று அறியும் போது மிகவும் பெருமைப்படுகிறேன்" என்று பொதுச் செயலாளர் கூறியவுடன் கூடியிருந்தோரது மகிழ்ச்சிப் பெருக்கு, வானளாவ எழுந்த கையொலியிலே தெரிந்தது.

மாநாட்டின் பொருளாளர் மா. கந்தசாமி, பி.ஏ, அவர்களும் மற்றும் தீர்த்தாரப்பன், பி. ஏ. எம். எஸ். இராமமூர்த்தி பி. ஏ. பழவை தமிழழகன்,பி,ஏ. துரையூர் ந, அலி, பி.ஏ. இரா. இளந்திரையன் ஆகியோர் தனித் தனித் தலைப்புகளில் பேசினர்.

பொதுச் செயலாளரது உரையோடு மாநாடு முடிவுற்றது!

மாணவர்களின் பிரச்சினைகள் பற்றிய பல தீர்மானங்கள், ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. மாநாட்டில்.

(12-ம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper in CEYLON
Regd No M.7074 விலை 16 காசு **MALAIMANI** Phone No. 83285
இலங்கையில் 20 சதம்

எந்தத் தேர்தல் வந்தாலும் தி. மு. க. காங்கிரசை எதிர்க்கும்!

மாப்பிள்ளைபோல் வந்து மகுடாபிஷேகம் செய்துகொண்ட காலம் மலையேறி விட்டது!

அண்ணா பேச்சு

7-ம் பக்கத் தொடர்ச்சி

ஒழிக்கிறோம். ஆனால் காமராசர் திராவிட நாட்டு பிரச்னையை ஒப்புக் கொள்ள வேண்டும்! ஒப்புக் கொண்டால், திராவிட முன்னேற்றக்கழகத்தை கலைத்து விட்டு காங்கிரசிலே சேருவோம்! அதற்கு மனதிலே திடமில்லையென்றால் நான் யாரோடு கூட்டு சேர்ந்தால் உங்களுக்கு என்ன?

கள்ளனை பிடிப்பதற்கு யாரையும் துணைக்கு அழைக்கத்தான் செய்வான் வீட்டுக்குடையவன்!

அடுத்த தேர்தலில் காங்கிரஸ் கட்சியும், சுதந்திரா கட்சியும் மோதும்! உங்களுடைய பணமும், ஆச்சாரியின் பணமும் மோதும்! அது எங்களுக்குத் தான் லாபம்!

அரும்பு மீசை வாலிபர்களும், ஆலையிலே உழைக்கின்ற தொழிலாளிகளும், விவசாயிகளும், மற்றவர்களும் எங்கள் பக்கம் நிற்பார்கள், இந்தப் பக்கம்தான் ஓட்டு விழும்! பணத்தோடு பணம் மோதும், இடையிலே நாம் வெற்றி பெறுவோம்.

தூத்துக்குடியில் நாமும், கம்யூனிஸ்டுகளும் கூட்டாக சேர்ந்தோம்! நமக்கும் அவர்களுக்கும் ஏற்பட்ட தோழமையினால் குறைந்த வாக்கில் நாம் தோற்றோம். நம்மோடு இரண்டறக் கலந்து ஒத்துழைத்ததால், அந்தக் கட்சிக்கு நான் இந்த இடத்திலே இருந்து நன்றியை தெரிவிக்க விரும்புகிறேன்!

காமராசர் தூத்துக்குடியிலே பேசியபோது—'தி.மு.க. தோழர்களே! அண்ணாத்துரை உங்களை ஏமாற்றுகிறார்' என்று கூறினார். ஆனாலும் நமது தோழர்கள் கடைசிவரை கட்டுப்பாடாக இருந்தார்கள்!

எங்களுக்கு தூத்துக்குடியில் கிடைக்காமல் போன வாக்குகள் எழுநூற்று சொச்சம்தான்! ஆனால் செல்லாத வாக்குகள் 1100! இந்த ஆயிரத்து நூறு வாக்குகளில் 400 வாக்குகள் எங்களுக்கு கிடைத்திருந்தால், வெற்றி வேறு பக்கம் திரும்பி இருக்கும்!

ஆகவே நாங்கள் தோல்வி அடைந்து துவண்டு விட்டோம் என்று மனப்பால் குடிக்க வேண்டாம்!

எந்தத் தேர்தல் வந்தாலும் எங்களைத் தாண்டித்தான் நீங்கள் போக வேண்டும்.

மாப்பிள்ளை போல் வந்து மகுடாபிஷேகம் செய்து கொண்ட காலம் மாறிவிட்டது! இனி அது திரும்பியே வராது! எனவே, நாங்கள் தோல்வி அடைந்தாலும், தேர்தல் வந்தால் எங்களைத் தாண்டித் தான் நீங்கள் முன்னாலே போக வேண்டும்.

உதாரணத்திற்கு, அவர்களுக்கு தெரிந்த கதை ஒன்றை அவர்களுக்கு சொல்ல விரும்புகிறேன்.

விக்ரமதித்தன் காலத்தில் இருந்த சிம்மாதனத்தில் போஜ மகாராஜன் என்னும் மன்னன் என்பவன் அதிலே அமர்வதற்கு படிமீது காலை வைத்தான். சிம்மாதனத்தில் இருந்த முப்பத்திரண்டு பதுமைகளும் கலகலவென்று சிரித்து, விக்ரமாதித்த மன்னன் ஆண்டதுபோல் நீ ஆளுவாயா, அவர் திறமை உனக்கு உண்டா என்று விக்ரமாதித்தனுடைய பெருமைகளை ஒவ்வொரு பதுமையும் பேசிற்றும்! முப்பத்திரண்டு பதுமைகளும் விக்ரமாதித்தன் சிறப்புகளை சொல்லிவிட்டதும், முப்பத்திரண்டு பதுமைகள் பதித்த சிம்மாசனம் மேலே பறந்தது!

விக்ரமாதித்தன் கதையில் வரும் சிம்மாசனத்திலுள்ள பதுமையைப போல நாங்கள் ஒவ்வொரு தேர்தலிலும் உங்களை சந்திப்போம்.

அடுத்த தேர்தலில் சிம்மாதனம் அமர்வதற்கு வந்தால், படிக்கட்டுக்குப் படிக்கட்டு இருந்த பதுமைபோல் தி. மு. கழகம் சந்திக்கும்.

அப்போது, ஒரு பதுமை பன்னிரரெண்டு ஆண்டு கால ஆட்சியிலே நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்கும். அப்போது இவர்கள் 'இது தெரியாதா, சுதந்திரம் வாங்கிக் கொடுத்திருக்கிறோமே' என்று கூறுவார்கள்.

அதற்கு இன்னொரு பதுமை, நீங்கள் வாங்கிக் கொடுத்தது சுதந்திரமென்றால், ராசகோபாலாச்சாரியார் ஆரம்பித்துள்ள கட்சிக்கு ஏன் சுதந்திரா கட்சி என்று பெயர் வைத்திருக்கிறார் என்று கேட்கும். அதையும் மீறி இன்னொரு படி சென்றால் வடக்கு, தெற்கு நிலைமைகளை விளக்கும். இன்னும் மேலே சென்றால், தொழிலாளி முதலாளி பேதம் இன்னும் நீக்கியபாடில்லையே, ஏன் என்று கேட்கும். இப்படி முப்பத்திரண்டு படிகளிலும் உள்ள பதுமைகள் கேட்கும்.

விக்ரமாதித்தன் சிம்மாதானம் போஜராஜனுக்கு கிடைக்காமல் பறந்து போய் விட்டது—ஆனால் இந்த சிம்மாதனம் இவர்களை விரைவில் கீழே தள்ளிவிடும்! இதை காங்கிரஸ்காரர்கள் அறிய வேண்டும்!

ஆகவே தோழர்களே, நான் பல கூட்டங்களில் சொல்லி வருவது போல் ஆளுக்கு கொஞ்சம் பொருளை சேர்ப்பீர்களானால் அடுத்த தேர்தலில் காங்கிரஸ்காரர்களை சந்திக்கும் முறையிலே சந்திக்க முடியும்!

அவர்கள் ஆட்சியிலே சுட்டுத் தள்ளிய போது பிணமானவர்களின் குடும்பங்கள் கண்ணீர் விட்டு கதறியழுததை சுட்டிக் காட்டி தக்க பதிலை தாருங்கள் என்று கேட்க முடியும்!

அவர்கள் ஆட்சி காலத்திலே வேலை இழந்தவர்கள் வேதனைப் படுகின்ற காட்சியை காட்டி, வேதனை துடைக்காததேன் என்று கேட்க முடியும்!

பாதுகாப்பு இல்லாமல் இருக்கின்ற பரிதாப நிலையை ஆட்சியாளருக்கு எடுத்துச் சொல்ல முடியும். அத்தகைய நல்ல பணியினைத் தான் தோழமைக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் எடுத்து செயலாற்றி கொண்டு வருகிறது!

அவர்கள் எதிர்ப்பை நாம் துச்சமென்று மதிக்க வேண்டும்! அவர்கள் தாக்கினால், தாக்கியவர்கள் கை வலிக்க வேண்டும்! மாற்றார் தாக்கினால் தாங்கிக் கொள்ளும் உடல் வலிவும், மன வலிவும் வேண்டும்!

நாம் எடுத்துச் சொல்கின்ற பேச்சிலே நாணயம் இருக்கிறது. நாம் சொல்லுகின்ற ஆதாரங்களுக்கு நாளுக்கு நாள் வலிவு அதிகரித்துக் கொண்டே வருகிறது!

நான், வட நாட்டிற்கும் தென்னாட்டிற்கும் உள்ள வேறுபாடுகளை பல உதாரணங்களைச் சொல்லி விளக்க வேண்டியதில்லை. நான்கு நாட்களுக்கு முன்னால் ஆந்திராவில் உள்ள ரெங்கா ரெட்டி என்பவர் வட நாட்டு சர்க்கார் ஆந்திரத்தை புறக்கணிக்கிறது என்று கூறினார். நாம் எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகின்ற கருத்துக்கள் அனைத்தும் எல்லா இடங்களிலும் பரவலாக பரவிக் கொண்டிருக்கிறது! எந்தக் கட்சியில் உள்ளவர்களும் நம்மைப் பற்றி ஆராய்ந்து பார்த்துக் கொண்டு வருகிறார்கள்.

ஆகவே அத்தகைய நல்ல சந்தப்பம், நம்மை நாடி வருகிறது. அப்படிப்பட்ட சூழ் நிலையில் நமக்கு கிடைத்தது போதும் என்று இருந்து விடாமல் நலல முறையில் மேலும் மேலும் வலிவை தேடிக் கொள்ள வேண்டும். அதற்கு தோழர்கள் அதிகமாக நல்ல முறையில் உழைக்க வேண்டும், அதற்கு, இப்படிப்பட்ட தோழமைக் கழகங்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

திருவாளர்கள் அன்பில் தர்மலிங்கம், எம். எஸ். மணி, எஸ். ஏ. ஜி. ராபி, ஜி. பராங்குசம், டி. பி. அழகமுத்து, குளித்தலை முத்துகிருஷ்ணன், அ. நடராசன், அ. சோமசுந்தரம் ஏ. வி. கிருஷ்ணமூர்த்தி, அண்ணாவி. இளமுருகு, பொற் செல்வி இளமுருகு, திறையூர் சித்தி, கலியபெருமாள், இராமன், மருதமுத்து செட்டி குளம் அல்லா பிச்சை, மகன்பறை பசவலிங்கம் ஆகியோர் வருகை தந்து சிறப்பித்தனர்!

அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குடந்தை கே. கே. நீலமேகம், மதுரை எஸ். முத்து, இளவரசு, வண்ணை சேதுராம் ஆகியோரிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

மாநாடு ஏறத்தாழ இரவு 9-30 மணிக்கு இனிது முடிவுற்றது.

மாநாட்டின் பொறுப்பாளர்கள் அனைவரும் கலைஞர் அவர்களின் வாழ்த்துச் செய்தியின்படி நாட்டினரின் பாராட்டிற்குரியவர்கள்!"

ஏஜண்டுகள் கவனிக்கவும்!

எல்லா விற்பனையாளர்களுக்கும் பிப்ரவரி மாத பில் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது! உடன் பில் தொகையை அனுப்பி வைப்பவர்களுக்கு மட்டுமே அடுத்த இதழ் அனுப்பி வைக்கப்படும்!

நிர்வாகி
மாலைமணி

பிறப்பு

விழுப்புரம், மாலைமணி விற்பனையாளரும், தி. மு. க. உறுப்பினருமான திரு. ஏ. கே. சாமிக்கண்ணு அவர்களின் துணைவியார் திருமதி பச்சை அம்மாள் அவர்கள் 20—2—60 அன்று ஒரு ஆண் மகவுக்கு தாயானார் என்னும் செய்தி கேட்டு பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம்!

ஆசிரியரும், 'வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ், 404 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5
அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை